பக்கங்கள் : பத்து

பொதுசன நூலகம் நாவாந்துறைப் பகுதி மாநகர சபை, யாழ்ப்பாணம்


# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2038 கார்த்திகை 22 சனிக்கிழமை (08.12.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 12


## இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் மனு ஏற்பு

# கைதாகி தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைவரின் விவரமும் நீதிமன்றுக்கு

## திங்களன்று சமர்ப்பிக்க அரசுக்கு உத்தரவு

கொழும்பு, டிசம்பர் 08

தலைநகரிலும், சுற்றுப் புறங்களிலும் வகைதொகையின்றித் தமிழர்கள் கைது செய்யப்பட்டமையை ஆட்சேபித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் நேற்று விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

கடந்த 28ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புகளின் பின்னர் க்கைது செய்யப்பட்டு தற்சமயம் தடுத்து வைக்கப்பட்டிருப்போரின் பட்டியலை நாளை மறுதினம் திங்கட்கிழமை நீதிமன்றில் சமர்ப்பிக்கவும் அரசுத் தரப்புக்கு உயர் நீதிமன்றம் உத்தர விட்டது.

அதேவேளை, அவ்வாறு தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டிருப்போர் எதிர்வரும் 14ஆம் திகதிக்கு (வெள்ளிக்கிழமைக்கு) முன்பாக விடுவிக்கப்படாவிட்டால், அத்தகையோரைத் தொடர்ந்து தடுத்து வைப்பதற்கான காரணத்தை நீதிமன்றில் தெரிவிக்க வேண்டும் என்றும் அது பணிப்புரை விடுத்தது.

பிரதம நீதியரசர் சரத் என் சில்வா, நீதியரசர்கள் நிமால் காமினி அமரதுங்க, ஜகத் பாலபட்டபெந்தி ஆகியோரைக் கொண்ட ஆயமே இந்த உத்தரவை நேற்று விடுத்தது.

இதேசமயம், தமிழர்கள் வகை, தொகையின்றிக் கைது செய்யப்படுகின்றமையை ஆட்சேபித்து மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தாக்கல் செய்திருந்த மனுவைத் தொடர்ந்து விசாரணைக்கு எடுக்காமல், அத்துடன் கைவிடுவதற்கும் நீதிமன்றம் தீர்மானித்தது.

மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் தாக்கல் செய்த மனுவில் பிரஸ்தாபிக்கப்பட்ட அதே விடயங்களை, இ.தொ.கா.தாக்கல் செய்த மனுவும் வற்புறுத்துவதாலும் -

இக்கைதுகளினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட ஆறு பேரின் சத்தியக் கடதாசிகளை இ.தொ.காவின் மனு மேலதிகமாகக் கொண்டிருப்பதாலும் -

இ.தொ.காவின் மனுவை விசாரித்து முடிவு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சண்முகலிங்கன் புதிய துணைவேந்தர்?

கொழும்பு, டிச. 08

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணைவேந்தராக பேராசிரியர் என். சண்முகலிங்கன் நியமிக்கப்பட உள்ளதாக மிகவும் நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.

இப்பதவிக்கு மூவரின் பெயர்களை யாழ். பல்கலைக்கழகப் பேரவை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்குப் பரிந்துரை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதம நீதியரசருடன் பஸில் சந்திப்பு

கொழும்பு, டிச. 08

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிரேஷ்ட ஆலோசகரும், அவரின் சகோதரரும், அரசுக்குள் அரசியல் விவகாரங்களில் செல்வாக்கு மிக்கவராக விளங்குபவருமான பஸில் ராஜபக்ஷ எம்.பி. நேற்று முன்தினம்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வெலி ஓயாவுக்கு இராணுவத் தளபதி

கொழும்பு, டிச. 08

இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகா நேற்றுக்காலை வெலிஓயாவுக்குச் சென்று அங்குள்ள களநிலைமைகளை ஆராய்ந்தார்.

நேற்றுக்காலை அங்கு விஜயம் செய்த தளபதி களத்தில் உள்ள தளபதிளுடன் கலந்துரையாடி நிலைமைகளை நேரில் தெரிந்து கொண்டார். (அ-1)

## அல்லற்படும் தனது மக்களுக்காக நீதிகோர இ.தொ.காங்கிரஸுக்கு உரிமை உண்டு

### பிரதம நீதியரசர்தெரிவிப்பு

கொழும்பு, டிச.08

"தனது மக்கள் அல்லற்படும் போது அவர்களுக்காகக் குரல் எழுப்பவும் நீதிகோரவும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் போன்ற அமைப்புகளுக்கு உரிமை உண்டு.

- இவ்வாறு பிரதம நீதியரசர் சரத் என் சில்வா குறிப்பிட்டார்.

இ.தொ.கா. சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு நேற்று உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே பிரதம நீதியரசர் இவ்வாறு கருத்து வெளியிட்டார்.

தனது மக்கள் முறையற்ற விதத்தில் கைது

(09 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா-பிள்ளையான் குழுக்கள் ஆரையம்பதியில் நேற்று மோதல்

கொழும்பு, டிச. 08

தலைமைப் பொறுப்பு உட்பட பல்வேறு பிரச்சினைகளையடுத்து பிளவுபட்டிருக்கும் கருணா - பிள்ளையான் குழுக்களுக்கிடையே மட்டுக்களப்பு ஆரையம்பதி அலுவலகத்தில் நேற்று மோதல் இடம்பெற்றுள்ளது.

தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள் என்ற கருணா குழுவின் ஆரையம்பதி அலுவலகத்தை முன்னதாக பிள்ளையான் குழு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த நிலை

(09 ஆம் பக்கம் பார்க்க)

## 'யுனெஸ்கோ' தனது அறிக்கையை மீள பரிசீலனை செய்ய இணக்கம்

கொழும்பு, டிச.08

'புலிகளின் குரல்' வானொலி நிலையம் மீது இலங்கை விமானப்படை மேற்கொண்ட வான்வழித் தாக்குதலுக்குக் கண்டனம் தெரிவித்து இவ்வார ஆரம்பத்தில் 'யுனெஸ்கோ' வால் விடுக்கப்பட்ட ஊடக அறிக்கை தொடர்பான விவகாரம் முழுமையாக மீளப் பரிசீலிக்கப்படும் என 'யுனெஸ்கோ' பணிப்பாளர் நாயகம் கொய்சிரோ மட்சுரா உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்ட பத்திரிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

யுனெஸ்கோவின் இந்த அறிக்கை தொடர்பாக இலங்கை அரசின் ஆட்சேபனையை நேரடியாகத் தெரிவிப்பதற்காக நேற்று முன்தினம் இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் சித்ராங்கனி வாகீஸ்வரா நேரடியாக

(09 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரத்தடை நேரம் கல்வளை வீதியில் வியாழன் இரவு இரட்டைக் கொலை!

யாழ்ப்பாணம், டிச. 08

சண்டிலிப்பாய், கல்வளைப் பகுதியில் வியாழன் இரவு இரட்டைக் கொலைகள் நிகழ்ந்தன. வர்த்தகர் ஒருவரும் சோதிடர் ஒருவரும் நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்தவேளை இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

அவர்கள் பயணம் செய்து கொண்டிருந்த வேளை சண்டிலிப்பாய் வீதியில் மின் தடையால் இருள் சூழ்ந்த வேளை - ஆயுததாரிகளால் அவர்கள் சுடப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

செல்வராஜா கஜேந்திரன் (வயது - 28) சங்குவேலிப் பகுதியில் புதிய கடை ஒன்றை வெள்ளியன்று புதிதாகத் திறப்பதற்கு முடிவு செய்திருந்தார் என்றும் -

கடையைத் திறப்பதற்குரிய சுபநேரத்தைக் கணிப்பதற்காக சோதிடரும், திருமணத் தரகரு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவிலும் நேற்று இருவர் சரண்

யாழ்ப்பாணம், டிச. 08

உயிர் அச்சுறுத்தல் காரணமாக மாணவன் ஒருவனும் இளைஞர் ஒருவரும் நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு வின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

தமது உயிருக்கு அச்சுறுத்தல் இருப்பதாகக் கருதுவோர் மனித உரிமை ஆணைக் குழுவிலும் நீதிமன்றங்களிலும் சரணடைவது இதுவரை வழக்கமாக இருந்தது. முதன் முதலாக, நல்லூர், ஆடியபாதம் வீதியைச்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஈழத் தமிழர் மீதான மனித உரிமை மீறல்

# பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் முன்னால் திங்களன்று கவன ஈர்ப்புப் போராட்டம்

லண்டன், டிச. 08

சர்வதேச மனித உரிமைகள் தினமான நாளை மறுதினம் திங்கட்கிழமை பிரிட்டனில் வாழும் புலம் பெயர்ந்த தமிழர்கள் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தின் முன்பாக கவன ஈர்ப்புப்போராட்டம் நடத்த உள்ளனர்.

இலங்கை அரசு, தமிழ் மக்கள் மீது மேற்கொண்டுவரும் மனித உரிமை மீறல் சம்பவங்களை சர்வதேச சமூகத்துக்குக் வெளிப்படுத்தும் வகையில் இப்போராட்டம் நடைபெறவுள்ளது.

பிரித்தானிய நேரப்படி திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு ஆரம்பமாகும் போராட்டம் பிற்பகல் 5 மணிவரை இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக ஏற்பாட்டாளர்களால் விடுக்கப்பட்டுள்ள செய்தியில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக கொழும்பு உட்பட ஏனைய இடமெங்கும் கொல்வதும், கடத்துவதும், சிறை செய்வதும் சிறிலங்கா அரச பயங்கரவாதத்தின் வழமையான செய்பாடுகளாகிவிட்டன. ஏனென்று

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 ஆவது ஆண்டு நினைவுப் பிரார்த்தனை

தவப்பேறு 27 - 09 - 1924



சிவப்பேறு 08 - 12 - 1972

### அமரர் இளையப்பா மகாதேவா

(தேவன்-யாழ்ப்பாணம்) (முன்னாள் ஆசிரியர், யாழ். இந்துக்கல்லூரி)

திதி-15-12-2007

வழிபாடு-சிவபூமி முதியோர் இல்லம்.

நாடறிந்த எழுத்தாளர், பேச்சாளர், மொழிபெயர்ப்பாளர்
நாடகவிற்பன்னர், இலக்கிய மன்றங்களின் நீதிபதி, நல்லாசிரியர் என
நாடுபோற்ற வாழ்ந்து, எம்மையும் வாழ்வித்த
எந்தையை நினைத்து வணங்குகின்றோம்

தகவல்:
திருமதி. பரமேஸ்வரி மகாதேவா (மனைவி), இளைப்பாறிய ஆசிரியர் (கனடா),
மகன்:- ம.உதயஸ்ரீ குடும்பம் - கொழும்பு, ம.பத்மஸ்ரீ குடும்பம் (ஆஸ்திரேலியா),
ம.குகஸ்ரீ குடும்பம்-ஆஸ்திரேலியா
மகள்:- திருமதி விஜயஸ்ரீ மதிகுணபாகன் (கனடா),
திருமதி.லயஸ்ரீ செல்வன்-அமெரிக்கா.

'கோகுலம்' திருநெல்வேலி தெற்கு, யாழ்ப்பாணம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
### சபாபதிப்பிள்ளை ஜெகதீசன்
(Rtd.Assistant Accountant, Ceylon Tobacco Company)

கடந்த நவம்பர் 8 ஆம் திகதி காலமான எங்கள் குடும்ப விளக்கின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு எம்மோடு துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலமும் பிற வழிகளிலும் எம்முடன் தொடர்பு கொண்டு அனுதாபம் தெரிவித்து எமக்கு உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு இன்று சனிக்கிழமை காலை 11 மணி முதல், கொழும்பு, பம்பலப்பிட்டி, மாணிக்கப் பிள்ளையார் கோவில் அருகாமையில் உள்ள AVS Hall, Ground Floor, No.8, Lorenz Road, Colombo -04. இல் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படியும் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

18 - 4/2, Perera Lane,
Colombo - 6

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் வீரகத்திப்பபிள்ளை
(முன்னாள் வர்த்தகர், மட்டக்களப்பு)

மண்கும்பாண் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வேலணை மணியகாரன் வீட்டடியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் வீரகத்திப்பிள்ளை (05.12.2007) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் தம்பதியினரின் அன்புமகனும், காலஞ்சென்ற நரசிங்கம் தம்பதியினரின் மருமகனும், தவமணியின் அன்புக் கணவரும், வாசுகி (இந்தியா), வள்ளிகாந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் தந்தையும், கிருஸ்ணவேணியின் அன்பு மாமனாரும், கணபதிப்பிள்ளை, இராசம்மா ஆகியோரின் சகோதரியும், லாவண்யா, கரீஸ், இராகவி ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.பே. 009144-65397057
இந்தியா.

தகவல்
மனைவி-வீ.தவமணி.

### கதிரவேலு சிவசுந்தரலிங்கம் (சுந்தர்)
(திருமண தரகர்)



அரியாலை, வேலப்பர் வீதியை பிறப்பிடமாகவும், தற்போது சண்டிலிப்பாய், கல்வளை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு சிவசுந்தரலிங்கம் (கல்யாண புரோக்கர்) 06.12.2007 வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு-பூரணப்பிள்ளை தம்பதியினரின் புதல்வனும், கிருஸ்ணகுமாரியின் அன்புக் கணவரும், உஷா (கனடா), தினேஸ்குமார், சசிக்குமார், விஜிதரன், ரோஜன், வித்தியா, சுஜிதரன், நிரோஜினி, மயூரிக்கா, பிரதபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாலகுமாரன், விஜயகுமார், ராணி (கொழும்பு) ஆகியோரின் சகோதரனும், சிறீபாஸ்கரனின் (கனடா) மாமனாரும், சிவாஜினியின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2007) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப 2 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப் படும்

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கல்வளை வீதி,
சண்டிலிப்பாய்.

(68738)

தகவல்
குடும்பத்தினர்.

### வலி தென்மேற்கில் சோதனை தீவிரம்

வலிதென்மேற்குடிசெ8
சண்டிலிப்பாய், மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு ஆகிய பகுதிகளில்படையினரின ரோந்து நடவடிக்கைகள், சுற்றிவளைப்புக்கள் கடந்த சில தினங்களாக அதிகரித்துள்ளன.

சண்டிலிப்பாய் சந்தியில் பஸ்வண்டிகள் நிறுத்தப்பட்டு பிரயாணிகள் இறக்கப்பட்டு சோதனையிடப்படுகின்றனர். மோட்டார் சைக் கிளில் செல்வோரின் ஆவணங்களும பரிசோதிக்கப்பட்டு வருகின்றன.

(1-135)

**எலைற் கல்வி நிறுவனம்**
147, கரேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்
**கல்வியாண்டு-2008**

தரம் 5 முதல்
O/Lவரை
புதிய பிரிவுகள் ஆரம்பம்
12.12.2007 புதன்கிழமை
காலை 9 மணி

**படிவம்**

க.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றி வேலை வாய்ப்புக்களை எதிர்பார்த்துள்ள இளைஞர்களை பயனுள்ள தொழில்களுக்கு ஈடுபடுத்துவதற்கான பயிற்சித்திட்டத்திற்கு விண்ணப்பிப்பதற்கான படிவம் உண்டு.

முடிவுத்திகதி
31.01.2008

Bharathy Pathippakam,
430, K. K. S. Road, Jaffna.

## BARATHY
### சித்தங்கேணி
### தரம் 5 முதல் 11 வரை

**புதிய வகுப்புகள் ஆரம்பம்**
**10.12.2007 திங்கள் 12 மணி**
**எமது தனித்துவமும் அதிதிறமையும் கொண்ட ஆசிரியர் குழுவினால்**

கணிதம்
திரு.சிவரூபன்
திரு. சிவா

விஞ்ஞானம்
திரு.தேவா
திரு. சனந்தன்

தமிழ்/தமிழ் இலக்கியம்
திரு.குகபரன்
திரு. தமிழ்மாறன்

வரலாறு/புவியியல் / குடியியல்
திரு.சுதன்
திரு. சிவபாலன்

சமயம்
திரு.கரன்
திரு.கோகுலன்

ஆங்கிலம்
திரு.விஜயபாஸ்கரன்

புலமைப் பரிசில் வகுப்பு
திரு.கலாமோகன்

வர்த்தகம்
திரு.லோகேஸ்வரன்

குறிப்பு
* மேற்குறிப்பிட்ட இப்பிரபல ஆசிரியர்கள் இப் பிரதேசத்தில் எமது நிறுவனத்தில் மட்டும்தான் கற்பிப்பார்கள்
* சென்ற ஆண்டுகள் போல இவ்வாண்டு மாணவர் தொகை வரையறுக்கப்பட்டுள்ளது.
தரம் 11,10,9 -100 மாணவர்களுக்கும்
தரம் 6,7,8-60 மாணவர் களுக்கும்-மட்டுமே அனுமதிகள் வழங்கப்படும். அனுமதிக்கு முந்திக் கொள்ளுங்கள்.

## வேலையாள் தேவை (பெண்கள்)

எமது நிறுவனத்தில் பணியாற்றுவதற்குப் பெண்பிள்ளைகள் தேவை.
நேரில் தொடர்பு கொள்ளவும்.
9 - 12 - 2007 ஞாயிறு 1.30 p.m.
பொருளியற் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(68735)

## மரண அறிவித்தல்

### தம்பு கனகரத்தினம்
(ஓய்வூதியர், நிலஅளவைத் திணைக்களம்)

மானிப்பாய் மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட தம்பு கனகரத்தினம் நேற்று (07.12.2007) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு தம்பதியினரின் மகனும், தம்பிமுத்து தம் பதியினரின் மருமகனும், காலஞ்சென்ற தேவியம்மாவின் கணவரும், தேவமனோகரி, ஸ்ரீஸ்கந்தராசா (சுவிஸ்), சுலோசனா, ஜெயந்திராணி, பஞ்சரத்தினம் (ஜேர்மனி), ஆகியோரின் தந்தையும் சற்குணராசா, நகுலேஸ்வரி, நடராசா, துரைராஜசிங்கம், விக்னேஸ்வரி ஆகியோரின் மாமனும், பகீரதன் (ஜேர்மனி), சிந்துஜா, டினேந் திரன், திவ்வியா, ஜெயதீபன், பிரதீபன், சஜீபன், சோபிதன், மயூரதி, விதுர்சன், மிதுலா, தனுசிகன், ரதிசாயினி, அனித்தா, கஜீபன் ஆகியோரின் பேரனும், வதுர்சன், தர்சா ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2007) பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத் தில் தகனஞ்செய்யப்படும்.

மானிப்பாய்.

தகவல்
குடும்பத்தினர்.

## THANKS GIVING SERVICE FOR

the 22 ND ANNIVERSARY CELEBRATION
OF
ASSEMBLY OF GOD, CHUNNAKAM
WILL BE HELD
ON
Sunday 9TH DECEMBER 2007 AT 9.00 A.M.
COME AND RECEIVE GOD'S RICHEST BLESSINGS

Assembly of God,
Library view,
K.K.S.Road, Chunnakam.

(68706)

## JAFFNA WOMEN'S CHAMBER OF COMMERCE INDUSTRY AND AGRI BUSINESS

யாழ்.வர்த்தக தொழில்துறை வேளாண் மகளிர் ஒன்றியம்

### "சுய தொழில் முயற்சி மேம்பாட்டுத் திட்டம்"

மேற்படித் திட்டத்தின் கீழ் ஆடை தயாரிப்பு தொழிலை விரிவுபடுத்தும் நோக்கில் பின்வரும் தொழில் பிரிவுகளில் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆடை தயாரிப்பு - 1 - வெட்டுநர் (Cutters)
- 2 - தைப்பவர் (Tailors)
- 3 - பயிலுநர் (Trainers)

இருபாலாரும் சுயவிபரங்கள் அடங்கிய விண்ணப்பங்களை தொலைத்தொடர்பு இலக்கத்துடன் (இருப்பின்) 15.12.2007 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூலமோ அல்லது நேரிலோ அனுப்ப வேண்டிய முகவரி -

யாழ்.வர்த்தக தொழிற்துறை வேளாண் மகளிர் ஒன்றியம்
உடுவில் வீதி, மானிப்பாய்.

பிரதம நிறைவேற்று அதிகாரி
யாழ்.வ.தொ.வே.ம.ஒன்றியம்

(68725)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 02 - 07 - 1927



விண்ணில் 08 - 12 - 2003

### தியோ சின்னப்பு செபமாலையம்மா

தம்பதியினர்

உயிர்ப்பும் உயிரும் நானே
என்னில் விசுவாசம் கொள்பவர் இழப்பிலும் வாழ்வார்.

ஊறணி,
காங்கேசன்துறை.

(68728)

பிரிவால் துயருறும்
பிள்ளைகள்.

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவனப் பணியாளர் திரு.ஐ.கனகராசா அவர்களின் அன்புத்தாயார்

**திருமதி ஐயம்பிள்ளை சரஸ்வதி**

அவர்கள் 05.12.2007ல் காலமாகியதையிட்டு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன சமூகம். (68736)

## மரண அறிவித்தல்

### அச்சிலீஸ் யோசப்
(Deputy Inspector General of Police Rtd)
(Director chrd, Patron Founder Member And Past President SLITAD)



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட அச்சிலீஸ் யோசப் நேற்று (07.12.2007) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசப்-அன்னம்மா தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்ற கரம்பன் எட்வேர்ட்-கிறேஸ் தம்பதியினரின் மருமகனும் இந்திராவின் அன்புக்கணவரும் மதுரிக்கா (Conslerhead of Chancelary, U.A.E.), எட்றியன் (Air Lanka), ராதிக்காஆகியோரின் அன்புத் தந்தையும், பிலோமினு யோகருயா, லியப்போல், பெர்னாட்டேட் சேவியர், கலிஸ்ரஸ் ஆகியோரின் அன்புத் சகோதரனும் றிச்சின், ஜசிந்தா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் நாளை (09.12.2007) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

72.4-றக்கா வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 0112805772 (68730)

தகவல்
கலிஸ்ரஸ்யோசப்
சகோதரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டில் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த பிரதேசங்கள் தோறும் சுகாதாரக் குழுக்கள்

குருநகர், டிசெ.8

யாழ்.மாவட்டத்தில் தற்போது பெருகி வரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்தி சிறந்த சுகாதாரச் சூழலை ஏற்படுத்தும் நோக்குடன் மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர் பிரிவுகளில் பிரதேச சுகாதார சூழல் மேம்பாட்டுக் குழுக்கள் அமைக்கப் பட உள்ளன. யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் இத் தகவலைத் தெரிவித்தார்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நிறுவனத் தலைவர்களுக்கான மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள வைத்திய நிறுவனங்களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இக் கலந்துரையாடலில் பங்குபற்றினர். அடுத்த ஆண்டின் ஆரம்பம் முதல் - ஜனவரி மாதம் தொடக்கம் - தமது பணியை ஆற்றக்கூடியவாறு இக்குழுக்கள் நியமிக்கப்படும்.

இக்குழுவில் பிரதேச செயலர், பிரதேசத்துக்குப் பொறுப்பாகவுள்ள சுகாதார வைத்திய அதிகாரி, பிரதேச வைத்திய நிலையங்களுக்குப் பொறுப்பாகவுள்ள டாக்டர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவார்கள்.

பிரதேச சூழலை துப்புரவாக வைத்திருப்பது, வடிகால்களின் துப்புரவு தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரதேச மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி நோய் உருவாகாமல் பார்த்துக் கொள்வது போன்ற பணிகளை இக்குழு முன்னெடுக்கும் - என்று அவர் மேலும் தெரிவித்தார். (202-51)

## மரத்திலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் காயம்

யாழ்ப்பாணம். டிசெ.8

மரத்திலிருந்து தவறி வீழ்ந்து குடும்பஸ்தர் காயமடைந்தார். இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை நுணாவில் மேற்கில் இடம்பெற்றது.

மரத்தில் காணப்பட்ட குருவிச்சையை வெட்டிக் கொண்டிருந்த வேளையில் மரக்கிளை முறிந்ததால் இவர் வீழ்ந்து காயமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மாசிலாமணி மகாலிங்கம் (வயது 55) என்பவரே காயமடைந்தவராவார். காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். (202-207)

## தொலைத் தொடர்பு நிலையங்களில் வாடிக்கையாளரின் விவரம் பதிவு?

யாழ்ப்பாணம் டிசெ.8

குடாநாட்டிலுள்ள தொலைத் தொடர்பு நிலையங்களில் தொடர்பைப் பெறும் பொது மக்களின் விவரங்கள் பதிவு செய்யப்படுவதாக வாடிக்கையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டில் சில பிரதேசங்களிலுள்ள தொலைத் தொடர்பு நிலையங்களிலேயே இந்த நடைமுறை பின்பற்றப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொடர்பைப் பெறுபவர்களின் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பவையே பதிவு செய்யப்படுகின்றன.

தொலைத் தொடர்பு நிலைய உரிமையாளர்களுக்கு மேற்படி விவரங்களைப் பதிவு செய்யுமாறு இராணுவத்தினர் அறிவுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகின்றது. (202-155)

## மக்கள் பட்டய பதாகைகள் பார்வைக்கு வைக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிசெ.8

யாழ். மாவட்ட கிராம அலுவலர்களிடம் மக்கள் பட்டயம் அச்சிடப்பட்ட பதாகைகள் யாழ்.செயலகத்தினால் வழங்கப்பட்டுள்ளன. இவற்றை மக்களின் பார்வைக்கு வைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி அரச அலுவலர்களால் முன்னெடுக்கப்படும் மக்கள் சேவையை துரிதப்படுத்தும் வகையில் மக்கள் பட்டயம் வெளியிடப்பட்டு அனைத்து பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்களிலும் கொண்டாடப்பட்டன.

இதனைத் தொடர்ந்து கடந்த ஒக்ரோபர் மாதம் கிராம அலுவலர் பிரிவு மட்டத்திலும் கிராம அலுவலர் அலுவலகங்களில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் பணிப்புரைக்கு ஏற்ப கொண்டாடப்பட்டு பட்டயமும் வெளியிடப்பட்டது.

தற்போது அனைத்து கிராம அலுவலர்களுக்கும் பொதுமக்கள் தமது கடமையை சுலபமாக நிறைவேற்றிக் கொள்ளும் வகையிலும் அதனை அறிந்துகொள்ளும் வகையிலும் அச்சிடப்பட்ட பதாகைகள் வழங்கப்பட்டுள்ளன.

கிராம அலுவலர்கள் பொதுமக்கள் பார்வைக்கு தெரியக் கூடிய முறையில் இதனை அலுவலகத்தில் வைத்திருக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (202)





*உடுவில் மகளிர் கல்லூரி ஆரம்பப் பிரிவு மாணவர்களின் நத்தார் கொண்டாட்ட நிகழ்வுகள் அண்மையில் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றன.*

*இந் நிகழ்வில் கல்லூரி அதிபர் திருமதி ஷிராணி மில்ஸ் உரையாற்றுவதை முதலாவது படத்திலும் முன்பள்ளி மாணவர்களின் 'நாங்கள் உலகத்தில்' என்னும் நிகழ்வையும் விருந்தினர்கள் மற்றும் மாணவர்கள் அமர்ந்திருப்பதையும் அடுத்துள்ள படங்களிலும் காணலாம்.*

*(படங்கள் - நேசன்)*




## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கு சர்வசாதன சங்க சனசமூக நிலையத்தின் பாரதி முன்பள்ளியின் 44 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குத் தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கலந்து கொள்வார். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க ஆசிரியர்களின் ஒளிவிழா ஒன்றுகூடல் நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்குத் திருப்பலியும் முற்பகல் 10 மணிக்கு ஒன்றுகூடல் நிகழ்வும் இடம்பெறும். (202)

* * *

கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயத்தின் பரிசுதின விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் ச.வாமதேவன் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலையின் கண் சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி ச.குகதாசன் கலந்துகொள்வார். (202)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.8

சமூக அபிவிருத்திமன்றம் அச்செழு, பூலசிட்டியில் வளர்மதி சேமிப்புக் கழகத்தில் நடத்திய தையல் பயிற்சியின் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக் கிழமையும் நடை பெறவுள்ளன.

முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலையில் நடைபெறவுள்ள இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினர்களாகக் கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் செல்வி சு.பிரேமினி, சமூக அபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி நவநீதம் ஜெகதீசன் ஆகியோர் கலந்துகொள்வர். (202)

* * *

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்.பல்கலைக்கழக முதுகலைமாணி அபிவிருத்தி மாணவர்களது ஒன்று கூடல் நிகழ்வு இன்று முற்பகல் 10 மணிக்கு கி.கிருஸ்ணராசா தலைமையில் இடம் பெறும்.

யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறை மண்டபத்தில் நடைபெறவுள்ள இந் நிகழ்வுக்கு முதுகலைமாணி அபிவிருத்தி சார் விரிவுரையாளர்கள், பேராசிரியர்கள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (95)

* * *

பிரான்பற்று உப - அஞ்சல் அலுவலகத் திறப்பு விழா எதிர்வரும் திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பண்.பிரான்பற்று மக்கள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் சி.மகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இவ் விழாவில் பிரான்பற்று பெரியவளவு ஸ்ரீ முருகமூர்த்தி ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ இ.உலகேஸ்வரக்குருக்கள் ஆசியுரை நிகழ்த்துவார். வடக்கு பிரதி அஞ்சல்மா அதிபர் வீ.குமரகுரு புதிய கட்டடத் தொகுதியைத் திறந்து வைப்பார். (202-95)

## சவேரியார் குருத்துவக் கல்லூரிக்கு புதிய இயக்குநர் நியமனம்

குருநகர்,டிசெ.8

கொழும்புத்துறை புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் இயக்குநராக வண.பிதா.ப. இருதயதாஸ் அடிகளார் யாழ் ஆயரால் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் பருத்தித்துறை பங்கின் பங்குத் தந்தையாக இறைபணியாற்றியவர்.

பருத்தித்துறை பங்கின் புதிய பங்குத் தந்தையாக வண.பிதா. பேண்ாட் றெக்னோ அடிகளார் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இவர் கடந்த ஏழு ஆண்டுகளாக ஜேர்மனியில் இறை பணிபுரிந்த பின்னர் அண்மையில் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (202-51)

## சர்வதேச மனித உரிமைகள் தினக் கொண்டாட்டம் திங்களன்று

யாழ்ப்பாணம்,டிசெ.8

சர்வதேச மனித உரிமைகள் தினக் கொண்டாட்டம் நாளை மறுதினம் திங்கட் கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் அச்சுக்கூட வீதியில் அமைந்துள்ள பாதுகாவலன் மண்டபத்தில் யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நடத்தப்படவுள்ளது.

யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக் குழுவின் இணைப்பாளர் எஸ்.சிவராஜலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமியும், கௌரவ விருந்தினர்களாக கரித்தாஸ் கியூடெக் நிறுவன பணிப்பாளர் வண.பிதா ஜீ.ஜெயக்குமாரும், யாழ்.மாநகர ஆணையாளர் எம்.எஸ்.சரவணபவவும் கலந்து கொள்வர்.

இதில் கட்டுரைப் போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வும் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (202-68)

## பொருளியலாளர் கழகம் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,டிசெ.8

இளம் பொருளியலாளர்களை இணைத்து யாழ். பொருளியலாளர் கழகம் (Jaffna Economists Association) ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பொருளியற் துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் இதற்கான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

யாழ்.மாவட்ட பிரதேசங்களின் அபிவிருத்தி கருதியும், எதிர்கால அபிவிருத்திகளை முன்வைப்பதற்காகவுமே யாழ். பொருளியலாளர் கழகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படுகின்றது.

முதன் முதலாக யாழ். பலகழைக் கழகத்தில் இருந்து வெளியேறும் முதுகலைமாணி அபிவிருத்தி மாணவர்களை உறுபினர்களாகக் கொண்டதாக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டு அபிவிருத்தி செய்யப்படும்.

இனங்காணப்படும் அபிவிருத்தியாளர்களையும் இணைத்து இக் கழகம் செயற்படும்.

யாழ். மாவட்டத்தில் பல்கலைக்கழக மட்டத்தில் முதன்முதலாக பொருளாதார வளத்தை இனங்காணுவதற்காக உருவாக்கப்படும் இந்த அமைப்பு பிரதேசத்தின் வளர்ச்சியை மையமாக கொண்டு இயங்கவுள்ளது.

இதன் அங்குரார்ப்பண விழா இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக பொருளியல்துறை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202-95)

## சாவகச்சேரி நீதிமன்றில் பெண்கள் சைக்கிள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

கொடிகாமம் நகரப் பகுதியில் அநாதரவான நிலையில் கண்டெடுக்கப்பட்ட பெண்கள் சைக்கிள் ஒன்று கொடிகாமம் பொலிஸாரால் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தகுந்த அதாரங் காட்டிப் பெற்றுக் கொள்ளுமாறு நீதிமன்றப் பதிவாளர் அறிவித்துள்ளார். (202-207)

## சிறுவர் அரங்க ஆற்றுகை

யாழ்ப்பாணம்,டிசெ.8

நல்லூர்தெற்கு ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் சிறுவர் அரங்க ஆற்றுகைப் பெருவிழா அண்மையில் அதிபர் திருமதி மி.விமலநாதன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

அரங்க செயற்பாட்டுக் குழுவினரின் ஆற்றுப்படுத்லில் நடைபெற்ற இவ் விழாவில் மாணவரின் அரங்க நிகழ்வு, ஆக்கக் கண்காட்சி, படக்காட்சி என்பன இடம்பெற்றன.

நிகழ்வில் விருந்தினராக ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி சிவாபாலன், ஆசிரிய ஆலோசகர் சத்தியகுமார் ஆகியோர்கலந்து கொண்டனர். (202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய கிளை நிறுவனத்துடன் நாம்...!

COMPUTER EXPRESS

ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்

Jaffna Head office
No 15, Sirambiyadi Lane. (off Stanly Rd.)
021-222 8250, 0777 222422

Branch office
No 167, Kasthuriyar Rd, (Near Uthayan Publication) Jaffna.

## Diploma in Hardware Engineering

❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault Finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking Etc..

Course Fee :2000/=

## Diploma in Computerized Accounting

ACCPAC + Quick Books Premier + MYOB ஆகிய முன்னணி Accounting Software களினூடாக கற்பிக்கப்படும்.

Course Fee :3500/=

## Diploma in Video Mixing

❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter.

Course Fee :3000/=

## Diploma in Graphic Designing

❖ Introduction to Computer ❖ Operating System(Win XP) ❖ Internet & email ❖ Adobe Photoshop ❖ Corel Draw ❖ Cool3D Studio ❖ Macro media Flash MX

Course Fee :2000/=

வகுப்புக்கள் ஆரம்பம் : 10/12/2007-9AM


## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
**தங்கராசா பரமேஸ்வரி**

மலர்வு
05 ✱ 09 ✱ 1942

உதிர்வு
22 ✱ 11 ✱ 1995

அம்மா எங்களின் அன்புத் தெய்வமே!
நீங்கள் உங்களையே அர்ப்பணித்து வளர்த்து
எங்களைத் தலைநிமிர்ந்து வாழ வைத்தீர்களம்மா!
உடலால் பிரிந்து பன்னிரண்டு ஆண்டுகள் கடந்தாலும்
எங்கள் இதயத்தில் உங்களை நாம்
என்றுமே அழியாமல் காக்கின்றோம்
நீங்கள் இறைவனோடு இருக்கின்றீர்கள்
என்று நாம் உணர்கின்றோம்.

தகவல்:
செ.தங்கராசா,
கோகுல வீதி, கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (88652)

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

## கோழிக்குஞ்சு விநியோகம்

PIRIMA சிவப்பு, வெள்ளைப் பேட்டுக் குஞ்சுகள் 10.12.2007 மாலை விநியோகிக்கப்படும். பதிவுகளை மேற்கொள்ளவும்.

**ராஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை. (68634)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு.

**ராஜீவ்,**
நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
P. ரவி, நாற்சந்தோர் வீதி, சாவகச்சேரி. (68633)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி செந்தில்மதி சுரேந்திரன்
அவர்களின் பாசமிகு சகோதரர்
*காசிநாதர் குலசிங்கம்*
அவர்களின் மரணச்செய்தி கேட்டு
ஆழ்ந்த கவலையடைகின்றோம்
அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்**
*யா/சிறுப்பிட்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை.* (சி/54633)

## விருந்துபசார நிகழ்வு

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களின் மதியபோசன விருந்துபசார நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

பாடசாலை ஜி.சீ.ஈ சாதாரண தர மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந் நிகழ்வில் விருந்தினர்களாக சிறுவர் பாதுகாப்பு நிதிய பாடசாலைகளின் கல்வி செயற்பாட்டு இணைப்பாளர் சிறில் அமலன், பழைய மாணவனும் யாழ்.கல்வி வலய நிகழ்ச்சி திட்ட உதவியாளருமான க.இராசசிவம் ஆகியோர் கலந்து கொண்டார்கள். (202-86)

## சிறுவர் தின நாடக நிகழ்வு

உடுப்பிட்டி,டிசெ.8

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற நாடகப் போட்டிகளில் முதலாம் இடத்தைப் பெற்ற 5 வலயப் பாடசாலைகளின் நாடக நிகழ்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு உடுப்பிட்டி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா தலைமையில் நடைபெறும் விழாவில் பிரதம விருந்தினராகப் பருத்தித்துறை பிரதேச செயலர் இரா.வரதீஸ்வரன் கலந்து கொள்வார். (202-155)

## மகாபொல புலமைப்பரிசில்


உயர் தொழில் நுட்பவியல் நிறுவன மாணவர்களுக்கான 2007ஆம் ஆண்டிற்குரிய மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

மகாபொல புலமைப்பரிசில் பெறும் மாணவர்கள் அனைவரும் உரிய ஆவணங்களில் கையொப்பமிடுவதற்காக எதிர்வரும் 11ஆம் திகதிக்கு முன் அலுவலகத்திற்கு சமூகமளிக்குமாறு கணக்காளர் க.இராஜேஸ்வரன் கேட்டுள்ளார். (202)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் ஆண்டுத் திவச அழைப்பும்

நாளை (09.12.2007) ஞாயிற்றுக்கிழமை





அமரர் கனகரெட்ணம் விஸ்வலிங்கம்
மண்ணில்: 03.12.1941
விண்ணில்: 20.11.2006

அமரர் விஸ்வலிங்கம் முகுந்தன்
மண்ணில்: 12.02.1976
விண்ணில்: 08.10.2006

அன்புடன் எமைக்காத்த அப்பா!
பண்பும் பாசமும் மிகுந்த எம் தலைவா!
தந்தையும் பிள்ளையும் பார் புகழ்
இயந்திர நுட்பவல்லுநர்
மங்காப் புகழ் பெற்றுத் திகழ்ந்தீர்கள்
மாசற்ற எங்கள் செல்வங்களே!
மரணத்திலும் இணைந்து சென்றீர்கள்
ஓராண்டு ஓடி மறைந்ததுவே- எனினும்
ஓராயிரம் நினைவுகளுடன் எங்களுள்
இருப்பீர்கள்

மகிழ்வுடன் அணைத்துக் காத்த
மருமக்கள் மனங்களில் என்றும்
உங்கள் எண்ணங்கள்
மழலை மொழிபேசி உறவுகொண்ட
மழலைகளாம் பேரர்களும் உங்கள்
நினைவுகளுடன்
மாமா என்று நீங்கள் உரிமை கொண்டாடிய
மாமனார் கூட மனதில் உங்கள் நினைவுடன்
வருடங்கள் ஆயிரம் சென்றால் என்ன?
வாடாமலராய் எம்மனதில் நீங்கள்!

*எம் குடும்பத் தலைவரினதும் குல விளக்கினதும் ஓராண்டு நினைவு நிகழ்வும் முதலாம் ஆண்டுத் திவசமும் நாளை (09.12.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வுகளில் கலந்து அவர்களின் ஆத்மசாந்திக்கு பிரார்த்திப்பதுடன் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*குறிப்பு: இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.* (சி/54627)

மணி மோட்டோர்ஸ் தொழில்நுட்ப நிறுவனம்,
மூக்காவத்தை, ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## சடலங்களை அடையாளம்-காணக் கோரிக்கை

பருத்தித்துறை - மந்திகை வைத்தியசாலையின் பிரேத அறையில் உள்ள இரு சடலங்களையும் அடையாளம் காண உதவுமாறு வைத்தியசாலை வட்டாரம் கேட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை - கொற்றாவத்தையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பின் பின்னர் மீட்கப்பட்ட 27 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலமும் கடந்த திங்கட்கிழமை பருத்தித்துறை - தம்பசிட்டி பண்டாரி அம்மன் கோயிலடியில் இடம்பெற்ற மோதலின் பின்னர் மீட்கப்பட்ட 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரின் சடலமும் பருத்தித்துறை - மந்திகை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (202-226)

*யாழ்ப்பாணம் சௌக்கிய சேவை கூட்டுறவுச் சிக்கன சேமிப்புக் கடன் நிவர்த்திச் சங்கம் (வ-து)*

## நாற்பத்தேழாவது வருடாந்தப் பொதுக்கூட்டம்

இடம் : யாழ்.அரசினர் போதனா வைத்தியசாலை மருத்துவ கிளினிக் பகுதி
காலம் : நாளை (09.12.2007) ஞாயிற்றுக்கிழமை
நேரம் : முற்பகல் 10 மணி
தலைவர்: திரு.செ.பேரின்பநாதன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகம் தரும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

(68696) *சி.சிவகுமார், செயலாளர்.*

அமரர் பிரம்மஸ்ரீ சர்வேஸ்வரக்குருக்கள் வரதராஜேஸ்வரக்குருக்கள் அவர்களது

## நான்காவது ஆண்டு நினைவு நூல் வெளியீட்டு விழா

நூல்:
வைதிக ஆபஸ்தம்ப உபாகர்ம ப்ரயோகம்

இடம்:
சுன்னாகம் மயிலணி கந்தசாமி கோயில்

காலம்:
கார்த்திகை மாதம் 23ஆம் நாள் நாளை (09.12.2007)
ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணி


தலைவர்: சிவஸ்ரீ க.கனகசபாபதிக் குருக்கள் அவர்கள்
(பிரதம குரு வருஷப்புலம் முத்துமாரி அம்மன் ஆலயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வரதராஜேஸ்வர உமாசுதசர்மா,
மயிலணி கந்தசாமி கோயில், சுன்னாகம். (68692)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில்
06 ✱ 04 ✱ 1924



ஆண்டவன் அடியில்
08 ✱ 12 ✱ 2002

**அமரர் கந்தையா இராமையா**

மனிதரில் மாணிக்கமாய் மருந்தருள் திலகமாய்,
புனிதமாய் வாழ்ந்து இறைவனடி சேர்ந்த
அன்புத்தெய்வம்.

உங்கள் ஆத்மசாந்திக்காக பிரார்த்திக்கும்:

54/9, குறோசெட் ஒழுங்கை,
கச்சேரி - நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம். (68652)

மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
21 ✱ 08 ✱ 1928

உதிர்வு
08 ✱ 12 ✱ 2005



**அமரர் முருகேசு கனகரெத்தினம்**

பண்பின் இருப்பிடமாய்
பாசத்தின் உறைவிடமாய்
வாழ்ந்து எம்மைவிட்டுப்
பிரிந்து ஆண்டுகள் இரண்டானதோ?

*உங்கள் ஆத்மசாந்தி பெறப் பிரார்த்திக்கும்:*

*95, சிவன்பண்ணை வீதி,*
*கொட்டடி, யாழ்ப்பாணம்.*

**குடும்பத்தினர்.** (68627)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் கைது எதேச்சாதிகாரமானது; அர்த்தமற்ற வன்முறைகளை நிறுத்தவேண்டும்

## அங்கிலிக்கன் பேராயர் வலியுறுத்து



தமிழர்கள் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டமை எதேச்சாதிகாரமும் பாரபட்சமும் கொண்ட செயல். இந்தச் செயல் பிரிந்து போயுள்ள எம்மை மேலும் பிளவுபடச் செய்யும். இந்த நாட்டில் நிலவும் அர்த்தமற்ற வன்முறை, பயமுறுத்தல், சமுதாயச் சீர்குலைவு என்பன தடுத்து நிறுத் தப்படவேண்டும்.

இவ்வாறு அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்புப் பேராயர் டுலீப் டீ சிக்கேரா நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பெரும்பாலான இலங்கை மக்கள் மிகுந்த சோகத்துடனும் கடும் விசனத்துடனுமே நாட்டில் மோசமடைந்து வரும் பயமுறுத்தல்களையும் வன்முறைகளையும் அவதானிக்கின்றனர். சமீபத்தில் பெருந்தொகையான தமிழ் மக்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டமை எதேச்சாதிகாரமும் பாரபட்சமும் கொண்ட செயல். இந்தச் செயல் பிரிந்துபட்டிருக்கும் நம்மை மேலும் பிளவுபடச் செய்யும். ஆனால் மக்களிடமிருந்து நல்லாட்சி நடத்துவதற்கான ஆணையைப் பெற்றவர்கள் இதனைக் குறித்து கவலைப்படுவதாகத் தெரியவில்லை.

பெரும்பாலான மக்கள் இன்றைய சூழலில் திறமையான பாதுகாப்பு நடவடிக்கைகள் இருக்கவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். அதேசமயம் எல்லா இலங்கை மக்களினதும் கௌரவம் பாதுகாக்கப்பட்டு எல்லா மக்களினதும் வசதியீனங்களும் தொல்லைகளும் மிகக் குறைந்த அளவிலே நடைபெறுவது உறுதிசெய்யப்படவேண்டும். இந்த வகையில் மனித உரிமைகள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மேற்கொண்ட நடவடிக்கைகளை நாம் பாராட்டவேண்டும்.

அனுராதபுரத்தில் உள்ள அபின்ன என்னும் இடத்தில் 15 அப்பாவிப் பொதுமக்கள் பேரூந்தில் வைக்கப்பட்ட கிளைமோர் குண்டு ஒன்றினால் கொல்லப்பட்டமை நாட்டில் நிலவும் பகைமை உணர்வுக்கும் விட்டுக்கொடுக்காத தன்மைக்கும் சோகம் தோய்ந்த உதாரணமாக இருக்கின்றது. இச்செயல் தமிழீழ விடுதலைப் புலிகளின் செயல் போல் தென்படுகின்றது. இது சமாதானத்தை விரும்பும் சகல இலங்கை மக்களினாலும் கண்டிக்கப்படவேண்டியதாகும்.

அதிகாரத்திற்கான போட்டா போட்டியில் பொதுமக்கள் கொல்லப்படுவது முற்றிலும் வெறுக்கப்படத்தக்கது. இது உடனடியாக நிறுத்தப்படவேண்டும். தமக்கு அருமையானவர்களை இழந்துவிட்ட உறவினர்களுக்கு எமது திருச்சபையினதும் குருமாரினதும் சபையாரினதும் ஆழ்ந்த அனுதாபத்தைக் கூறிக்கொள்கின்றேன்.

இப்படியான மனித அவலமும் அவமானமும் இலங்கை அரசும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மேற்கொள்ளும் யுத்த அணுகுமுறைகளினாலும் தந்திரோபாயங்களினாலும் ஏற்படுகின்றது.

இன்று எமது நாட்டிலே வாழ்க்கை முன் எப்போதும் இல்லாதவாறு இருண்டு காணப்படுகின்றது. இந்நாட்டில் சமாதானத்தை விரும்பும் சகல இனத்தவர்களும் பொதுமக்களும் மதத்தலைவர்களும் சமாதானத்திற்காக இடைவிடாது ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இந்த நாட்டில் நிலவும் அர்த்தமற்ற வன்முறை, பயமுறுத்தல், சமுதாய சீர்குலைவு என்பன தடுத்து நிறுத்தப்படல் வேண்டும். காலங்கடந்த இந்த நேரத்திலும் அரசாங்கத்தையும் தமிழீழ விடுதலைப் புலிக்ளையும் சண்டையை நிறுத்தும்படியும் பேச்சு மூலமான ஒரு தீர்வுக்கு உழைக்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (50)

## சான்றிதழ் பெற அறிவுறுத்து

பலாலி ஆசிரிய கலாசாலையின் 2001 ஜூலையிலிருந்து 2003 ஜூன் 30 வரையான கல்வியாண்டுக்கான றோமன் கத்தோலிக்க நெறிப் பரீட்சை பெறுபேற்று மூலச் சான்றிதழ்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளுமாறு அதிபர் த.காங்கேசபிள்ளை கேட்டுள்ளார். (202)

## சாரணர், குருளைச் சாரணத் தலைவர்களுக்கு பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம்,டிசெ.8

இலங்கை சாரணர் சங்கத்தின் கிளிநொச்சி மாவட்ட தென்மராட்சி கிளையினர் புதிய சாரணர், குருளைச் சாரணர் தலைவர்களுக்கான கலைக்கூறு - 1 இற்கான பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளனர்.

பயிற்சி வகுப்புகள் இன்று தொடக்கம் மூன்று தினங்கள் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடத்தப்படவுள்ளன.

மாவட்ட ஆணையாளர், உதவி மாவட்ட ஆணையாளர்கள், சாரண ஆசிரியர்கள் ஆகியோரால் பயிற்சி வகுப்புகள் நடத் தப்படவுள்ளன.

புதிய சாரணர், குருளைச் சாரணர் ஆகியவற்றின் ஆசிரியர்களை கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (202-207)





தியாகி அறக்கொடை நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைவருமாகிய வா.தியாகேந்திரனின் 56ஆவது பிறந்த தின நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.நாவலர் வீதியில் அமைந்துள்ள நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்துகொண்டவர்களை முதலாவது படத்திலும் - நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# அரசியல் ரீதியில் புலிகளைத் தோற்கடிக்க அரசு தயக்கம் காட்டுவதற்கு காரணம் என்ன?

## நாடாளுமன்றில் விமல் வீரவன்ஸ கேள்வி

கொழும்பு,டிசெ.8

எமது படையினர் இராணுவ ரீதியாகப் புலிகளை வெற்றிகொண்டு வருகின்றனர். ஆனால் அரசு அரசியல் ரீதியாகப் புலிகளைத் தோற்கடிக்கத் தயங்குவது ஏன் எனக் கேள்வி எழுப்புகின்றார் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான விமல் வீரவன்ஸ.

பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் உரையாற்றுகையில்:

சர்வதேச சமூகம் இன்று புலிகள் இயக்கத்திற்கு இராஜதந்திர அர்த்தனத்தைப் பெற்றுக்கொடுக்கவே முயற்சிக்கின்றன.

பிரபாகரன் இன்று இராணுவ ரீதியாகத் தோல்வியடைந்து வருகின்றார். அதனால் இப்பொழுது தனது வியூகத்தை மாற்றி அமைத்துள்ளார். இதனால் தென்பகுதி சிவிலியன்கள் மீது குறிவைத்துச் செயற்படுகின்றார்- என்றார்.

கொலைவெறி பிடித்த பிரபாகரன் ஒருபோதும் சமாதானப் பேச்சுக்கோ, அரசியல் தீர்வுக்கோ உடன்படமாட்டார்.

இப்படியான நிலையில் புலியுடன் சமாதானப் பேச்சு, அரசியல் தீர்வு என்று கூறுவதில் எந்தவிதமான அர்த்தமும் கிடையாது.

அரசும் புலிகளும் செய்துகொண்ட சமாதான யுத்த நிறுத்த ஒப்பந்தம் உடனடியாகக் கிழித்து எறியப்பட வேண்டும். இதன் மூலம் சர்வதேச தலையீட்டைத் தடைசெய்யமுடியும்.

பயங்கரவாதியான பிரபாகரனுடன் பேச்சு நடத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டும் என்று கூறும் ஐக்கிய நாடுகள் சபையும், சர்வதேச அமைப்புகளும் பின்லேடனுடனும், அல் - குவைதா இயக்கத்துடனும், காஷ்மீர் தீவிரவாதிகளுடனும் பேசி அரசியல் தீர்வு ஒன்றை ஏற்படுத்த முன்வருவார்களா என்று சவால் விடுகின்றோம்.

புலிகள் எப்பொழுதும் சிவிலியன்கள் மீது அக்கறை கொள்வதில்லை. வன்னியில் தமிழ் மக்கள் புலிகளால் வதைக்கப்படுகின்றனர். திறந்த வெளி சிறைச்சாலைகளில் அந்த மக்கள் சித்திரவதை செய்யப்படுகின்றனர். வன்னியில் தாய்மார் தமது ஆண் பிள்ளைகளின் உடைகளைக் கூட வெளியே காயப் போட அஞ்சுகின்றனர்- எனவும் விமல் வீரவன்ஸ கூறினார். (சி)

# குடாநாட்டு வைத்தியசாலைகளில் பணியாற்ற 67 வயதுக்குட்பட்ட வைத்தியர்களுக்கு அழைப்பு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடுத்துள்ளார்

யாழ்ப்பாணம்,டிசெ.8

யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் வைத்தியர் பற்றாக்குறை நிலவி வருகின்றது. எனவே யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் உள்ள வைத்திய நிறுவனங்களில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிவதற்கு விருப்பம் உடைய 67 வயதுக்கு உட்பட்ட வைத்தியர்களைத் தொடர்புகொள்ளுமாறு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

67 வயதுக்கு மேற்பட்ட வைத்தியர்களைக் கடமையில் இருந்து ஓய்வு வழங்குமாறு பொதுநிர்வாக அமைச்சு விடுத்த சுற்றறிக்கையின் பிரகாரம் எமது பகுதியில் 4 வைத்திய அதிகாரிகளும் 13 பதிவு வைத்திய அதிகாரிகளும் சேவையை விட்டுச் செல்கின்றார்கள். புதிதாக நியமனம் பெற்ற வைத்திய உத்தியோகத்தர்களில் 14 பேர் மாத்திரமே கடமையைப் பொறுப்பேற்றுள்ளனர்.

எனவே வைத்திய நிறுவனங்களை இயங்கவைப்பதற்கு வைத்தியர் பற்றாக்குறை உள்ளது. இதனால் 67 வயதுக்குட்பட்ட - ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விருப்பம் உடைய வைத்தியர்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிமனையுடன் நேரடியாக அல்லது 2222278, 2223725 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (50)

# வாசகர் திருமுகம்

## அம்பன் J/422 கிராமசேவையாளர் பிரிவு கிராம புனரமைப்புக் குழுவின் விளக்கம்

01.12.2007 உதயன் பத்திரிகையில் வாசகர் திருமுகம் பகுதியில் 'சுனாமி பாதித்த வடமராட்சி மக்களும் அதிகாரிகளின் கொள்கை மாற்றமும்' என எழுதப்பட்டு அம்பன், குடத்தனை வீட்டுத்திட்டப் பயனாளிகள் தந்த தகவல் எனக் காட்டப்பட்டுள்ள அந்த விடயங்கள் தொடர்பாக அம்பன் வீட்டுத்திட்ட பயனாளிகள் சார்பில் அம்பன் கிராமிய புனரமைப்புக் குழுவினர் சார்பில் தங்களுக்கு மறுப்பினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றோம். எமது பகுதி அம்பன் கிராமமாகும். J/422 கிராமசேவையாளர் பிரிவைக் கொண்ட தனிக்கிராம சேவையாளர் பிரிவு. எமது கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட வீட்டுத் திட்டமோ அல்லது மக்களுக்கு வழங்கப்பட்ட இரண்டு பரப்புக் காணிகளோ புதிதாக தற்பொழுது பதவியில் இருக்கும் உதவி அரச அதிபரால் ரத்துச் செய்யப்படவில்லை என்பதைத் தங்களுக்குத் தெரியப்படுத்துவதோடு எமது பகுதி கிராமசேவகரும் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபரும் உலக வீட்டுத் திட்டத்துக்கு பொறுப்பான அதிகாரிகளும் எமது கிரா மத்தில் வழங்கப்பட்ட வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு மேலதிகமாக இணைநிதியீட்டு நிறு வனத்துடன் (Co-Finance) இணைந்து மேலதிக நிதியினைப் பெற்றுத் தருவதற்கான முயற்சியில் ஈடுபட்டு அது வெற்றியினைத் தரும் தருணத்தில் உள்ளது. பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் மேற்படி விடயம் எமது பகுதி வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கு பாதகமாக அமைந்துவிடலாகாது என்று விரும்புகின்றோம்.

தி.இலங்கநாதன்,
*தலைவர், கிராமிய புனரமைப்புக் குழு, J/422, அம்பன்.*

## கப்பல் பயணிகளிடம் ஏன் மேலதிக பஸ் கட்டணம்?

யாழ்.மக்களுக்குப் போக்குவரத்துச் சேவையினை வழங்கி வருவதில் வடபிராந்திய இ.போ.சபை முக்கியமானது. அசாதாரண குடாநாட்டுச் சூழலிலும் அக்கறையுடன் கடந்த காலங்களில் மக்களிற்குச் சேவை வழங்கியிருந்தது.

இச்சபைக்குச் சொந்தமான பஸ்கள் கப்பல் பயணிகளை ஏற்றி இறக்குவதிலும் முக்கியமான சேவையினை வழங்கி வருகிறது. பாதுகாப்புக் காரணங்களினால் இச்சேவைக்கு தனியார் பஸ்களுக்கு அனுமதியிருக்கவில்லை

யாழ்.சிங்கள மகா வித்தியாலயத்திலிருந்து காங்கேசன்துறைக்கு ஒரு வழிப் பயணக் கட்டணமாக ரூபா 100 அறிவிடப்பட்டு வந்தது. அவ்வாறே தெல்லிப்பழையிலிருந்து யாழ்.நகருக்குரிய கட்டணமாகவும் அதே அளவு பணம் அறிவிடப்பட்டு வந்தது.

எனினும் கடந்த 05.11.2007 அன்றும் 09.11.2007 அன்றும் மாலை 5.30இற்கு தெல்லிப்பழையிலிருந்து யாழ்.நகருக்குச் சென்ற இ.போ.ச. பஸ்ஸில் நடத்துநர் கப்பல் பயணிகளிடமிருந்து ரூபா 130, 150 எனப் பலவாறு கட்டணம் அறவிட்டுள்ளார். இதனால் பயணிகள் பெரும் விசனமடைந்துள்ளனர்.

இதில் அநீதியான செயல் என்னவெனில், நடத்துநரால் வழங்கப்பட்டுள்ள ரிக்கெற்றில் ரூபா 100 மட்டுமே எழுதப்பட்டுள்ளது. ஆனால் அறவிடப்பட்ட பணமோ ரூபா 130, ரூபா 150 எனப் பலவாறு அறவிடப்பட்டுள்ளது. இது தொடர்பில் பயணிகள் விளக்கம் கேட்டால், பொதிக்கூலி எனக் காரணம் கூறப்பட்டாலும் அதற்குரிய ரிக்கெற்றைக் கேட்டால் நடத்துநர் கைவிரிக்கின்றார். அதுமட்டுமன்றி, தெல்லிப்பழையிலிருந்து சுன்னாகம், மருதனார்மடம், இணுவில் போன்ற இடங்களிற்கும் ஒரே கட்டணமே அறவிடப்படுகிறது. இது ஏற்றுக்கொள்ளமுடியாத பாதிப்புத் தரும் செயலாகும்.

மேலும் அரச கடமையின் பொருட்டு சென்றுவரும் உத்தியோகத்தர்களும் இதனால் கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர். அவர்கள் தங்கள் பயணப் படியைப் பெறுவதற்காக நடத்துநரிடம் ரிக்கெற்றை முழுத்தொகைக்கும் பெறமுடியாமல் உள்ளது. எந்த வித ரிக்கெற்றும் வழங்காமல் மேலதிகமாக நடத்துநரால் அறவிடப்படும் பணம் எங்கே செல்கிறது? யாருக்குரியது? அதிகாரிகள் அறிவார்களா?

பாதிக்கப்பட்ட பயணிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## ஐயம்பிள்ளை சரஸ்வதி



கோண்டாவில் தில்லையம்பதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஐயம்பிள்ளை சரஸ்வதி 05.12.2007 புதன்கிழமை இறைபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற வேலன் ஐயம்பிள்ளையின் அன்பு மனைவியும், காலம்சென்றவர்களான பொன்னன் சீதேவி தம்பதியரின் மூத்த மகளும் தேவராசா, இந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற ரதிலீலா மற்றும் வசந்தா, கனகராஜா (உயர்தொழில் நுட்பக் கல்லூரி) காலஞ்சென்ற தவராசா மற்றும் யோகராசா (யாழ்.பல்கலைக்கழகம்), செல்வராசா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும், மகாதேவன், பரமேஸ்வரி, ஞானசேகரம் ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (08.12.2007) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் கிழக்கு கொட்டைக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வே.தர்மகுலசிங்கம் (மருமகன்)

தில்லையம்பதி,
கோண்டாவில். (68702)

## கந்தையா கணபதிப்பிள்ளை



நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கணபதிப்பிள்ளை நேற்று 07.12.2007 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், அமரர்களான சண்முகலிங்கம், லட்சுமிப்பிள்ளை ஆகியோரின் பாசமிகு சகோதரனும் நல்லம்மாவின் அன்புக் கணவரும் மயில்வாகனம், கதிர்வேல் (கனடா), ராசலிங்கம் (கனடா), நடேசலிங்கம் (கனடா), சுபத்திரா தேவி (சுவிஸ்), விஜபி (வலி.கிழக்கு தெ.ப.நோ.கூ.சங்கம் நீர்வேலி, H.N.D.A 3ஆம் வருட மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரோகினி, உதயவதனா (கனடா), புஸ்பமலர் (கனடா), சுஜந்தன் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனும் பகீரதன், ரசிதரன், தர்மினி, யசிதரன், சாமினி, கதீஸ், பிரதீஸ் (கனடா), கஜானி, செளமியா (கனடா), கபிலன், ஜனனி, சாம்பவி (கனடா), துர்க்கா, சாயி (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (07.12.2007) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி. (68719)

சுண்டுக்குளி பரி.யோவான் ஆலய வாலிப சுமாம் வழங்கும்

### மீட்பின் குரல்

### இயல், இசை, நாடக இன்னிசை வழிபாடு

இன்று (08.12.2007) சனிக்கிழமை பிற்பகல் 4மணிக்கு சுண்டுக்குளி பரி.யோவான் ஆலயத்தில் நடைபெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருச்சபையினர்,
பரி.யோவான் ஆலயம்,
சுண்டுக்குளி.

# மரண அறிவித்தல்

## திருச்செல்வம் றோசம்மா



பண்டத்தரிப்பு, பற்றிமாகிரியை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருச்செல்வம் றோசம்மா 03.12.2007ஆம் திகதி இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு திருச்செல்வத்தின் அன்பு மனைவியும், தேவசகாயம், வின்சன்ட் ஜெயசீலன், கூறேதாஸ் தவசீலன் (தங்கராசா), ஜெயசீலி, காலஞ்சென்ற ஜெயராஜினி, அன்ரன் ஜெயபாலன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் செபரட்ணமலர், இந்திராமேரி றோஸ், ஜோண் எட்வேட், அற்புதராணி ஆகியோரின் அன்பு மாமியாரும், ரவீந்திரன், செல்லம், சந்திரா, மகேந்திரன், வினிஸ் சர்மிளா, வினிஸ் கன்ஷியா, அலெக்ஸ் பேடினன்ட், அலெக்ஸ் வோசிங்டன், பிரியங்கா, ஒலிவர் தாரணிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (09.12.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் சேமக் காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

பற்றிமாகிரி,
பண்டத்தரிப்பு. (68718)

தகவல்:
குடும்பத்தினர்.

### இறைச்சிக்கோழி

3Kg விற்கு மேற்பட்ட புறொயிலர் 1Kg 450/-, சுத்தம் செய்தது 650/-. வியாபாரிகளுக்கு விலை குறைக்கப்படும். (சுத்தம் செய்தல் இலவசம்)

1. NEW R.S.K FARM மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில்.
2. NEW R.S.K FARM கே.கே.எஸ் வீதி சுன்னாகம் (கொமர்சல் வங்கி அருகில்) (68707)

### கமலக்கண்ணன் திருமணசேவை

74 ஆம் ஆண்டு செவ்வாய்க்குற்றமற்ற சைவ போசனமுடைய டாக்டருக்கும் 79 ஆம் ஆண்டு செவ்வாய்க் குற்றமற்ற 86 பாவமுடைய டாக்டருக்கும் தகுதியான மணமகள் தேவை. அத்தோடு 73 ஆம், 75 ஆம், 76ஆம் ஆண்டு கனடா சிற்றிசன் உள்ள மணமகனுக்குப் படித்த அழகான மணமகள் தேவை. 75 ஆம் ஆண்டு கனடா, 78ஆம் ஆண்டு பிரான்ஸ், 76ஆம் ஆண்டு லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகளுக்கு படித்த ஆங்கில அறிவுள்ள மணமகன்கள் தேவை. டாக்டர்கள், இஞ்சினியர்கள் பட்டதாரிகள், விசிதர்கள், வர்த்தகர்கள், பாவம்கூடிய மணமக்களும் பாவம் குறைந்த மணமக்களும் எம்மிடமுள்ளன. மேலும் வெளிநாட்டில் பிரஜா உரிமைபெற்ற மணமக்கள் எம்மிடமுள்ளன.

தொடர்பு:
171/7, நல்லூர் வடக்கு வீதி,
மனோன்மணி அம்மன் கோயிலடி,நல்லூர். T.P. 0776070862 (68714)

## முதுகலைமாணி கற்கைநெறி பதிவுகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தினால் புதிதாக 2007/08 கல்வியாண்டில் ஆரம்பிக்கப் படவுள்ள முதுகலைமாணியில் சைவசித்தாந்தம் மற்றும் தமிழ் ஆகிய கற்கைநெறிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் பட்டப்பின்படிப்புகள்பீடத்தில்பதிவுகளை மேற்கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளது. கற்கை நெறிகள் யாவும் எதிர்வரும் ஜனவரி 22ஆம் திகதி ஆரம்பமாகும்.

இதேவேளை கடந்த ஆண்டு நடத்தப்பட்ட முதுகலைமாணி கற்கை நெறிகளான சனத்தொகை அபிவிருத்தி கற்கைகள், பிரதேசத்திட்டமிடல் மற்றும் திட்டமிடல் ஆகியவற்றுக்கும் நூலக தகவல் விஞ்ஞானத்தில் பட்டப்பின் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான புதிய அனுமதிக்குரிய விண்ணப்பங்களும் எதிர்வரும் 15ஆம் திகதிவரை பீட அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் என பீடாதிபதி அறிவித்துள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வியியல் முதுமாணி கற்கைநெறியை கற்பதற்கான விண்ணப்பங்களும் தகுதிவாய்ந்த பட்டதாரி ஆசிரியர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளன. (202)

## முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவிகளுக்கு நியமனம்

யாழ்ப்பாணம்,டிசெ.7

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களுக்கு முகாமைத்துவ உதவியாளர் தரம்III பதவிகளுக்கு நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பொது நிர்வாக உள்நாட்டலுவலர்கள் அமைச்சின் செயலாளரினால் எதிர்வரும் 10ஆம் திகதி தொடக்கம் நியமனம் வழங்கப்படவுள்ளது.

கடந்த மாதம் கொழும்பில் இடம் பெற்ற நேர்முகப் பரீட்சையில் கலந்து கொண்டவர்களுக்கே நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (202-207)

## கருத்தரங்கு

யாழ்ப்பாணம்,டிசெ.8

யு.என்.ஹபிற்றாட் நிறுவனத்தின் அனுசரணையுடன் செயற்திறன்அரங்க இயக்கம்இணைந்து நடத்தும் எயிட்ஸ் மற்றும் சிறுவயதில் கர்ப்பம் தரித்தல் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மீனாட்சிபுரம் (ஜே/85) பிரிவில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மீனாட்சிபுரம் பண்ணை தேவாலயத்தில் நடைபெறவிருக்கிறது. (202)

### தேவை

LML Select II Scooter நற்போதைய விலையில் தேவை. சில்வர், Ash Colour, English No விரும்பத்தக்கது.

தொடர்பு:- 021 4591989
நாகலிங்கம் வீதி,
கோகுவில். (68689)

# கண்ணீர் அஞ்சலி

எமது பணிமனையில் பணியாற்றும்
வஸ்தியாம்பிள்ளை - தார்சீசியஸ்
அவர்களின் அன்புத் தாயார்

## வஸ்தியாம்பிள்ளை எலிசபெத்

அவர்கள் காலமான செய்தி கேட்டு அதிர்ச்சி அடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்தித்து நிற்கின்றோம்.

ஊழியர் நலன்புரிச் சங்கம்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,நெடுந்தீவு. (68722)

# 30 ஆவது அகவையும் 10ஆம் மாத நினைவலைகளும்

மலர்வு 08 12 1977 — உதிர்வு 03 03 2007



அமரர்

## ஜெயராசலிங்கம் பிரதீபா

பாலை வனத்தின் பூக்கள் மலர்ந்திடலாம்
எம் அன்பு நீரைப் பெற்றிடுவோம்
சூரியன் திசைமாறி மறையலாம் - ஆனால்
உம் நினைவலைகள் எமை விட்டு அகலாது
தெய்வத்துக்குக் கண்ணுமில்லை - எமக்குத்
தேம்பியழ தெம்புமில்லை
தேடியும் கிடையாத செல்வமடி - தீபா
நீ தீயிலும் வேகாத தங்கமடி
இனியொரு பிறப்பெடுப்பின் - நீ
யுகமே இல்லா தேசம் ஒன்றில் மலர்ந்திடடி

உனை நினைத்து கதறியழ
எமை விட்டு எங்கு சென்றாய்?
எம் வாழ்வில் விளக்கேற்றிய நீயே
எம் உயிர்த்தீயில் எரிந்தாயோடி
வேதனையில் துடிக்கிறது எமதுள்ளம்
வேளைதனில் வந்திடுவாய் எமையாற்ற
பாலியவன் பெற்றவளை பரிதவிக்க விட்டுவிட்டு
பாங்கான கணவனை பரிதவிக்கவிட்டு விட்டு
நீ வரும் பாதை பாத்திருக்கும் அவ்வேளையிலே
வந்து போக்கிடுவாய் எம் துயரதனை.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

பா.வசீதரன் (தம்பி)

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

படைப்பு 29 - 11 - 1984 — பறிப்பு 08 - 11 - 2007



## செல்வி சுஜாஜினி தங்கராசா

மாதம் ஒன்று கழிந்தபோதும்
மகளே சுஜாஜினியே உன் உருவம்
மனதிலே நிலையாய் குடிகொண்டுள்ளதே!
மதிப்போடு வாழ்ந்த எம் தங்கச்சியே
மண்ணிலே உனக்கு நன்மைகள் எதிர்பார்த்தோம்
மகிழ்வான வாழ்வுக்கு வழிபார்த்தோம்
மரணம்தான் மீனாட்சி அன்னையிடம் இழுத்ததே!

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (08.12.2007) சனிக்கிழமை நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பெரியமாவடி வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

பிரிவால் துயருறும்:
குடும்பத்தினர்.

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி
## தம்பிப்பிள்ளை

தோற்றம் 03 ★ 08 ★ 1936
மறைவு 22 ★ 11 ★ 2003

திதி: 08.12.2007

ஆண்டுகள் நான்கு ஆனபோதும்
ஆறாது எம்துயர்; உமது
அன்பான நினைவுகளில்
அமிழ்கிறோம் ஐயா!
உங்களது ஆத்மா சாந்தியடைய
ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் மாறாத நினைவுகளுடன்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

அச்செழு,
நீர்வேலி. (68708)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் உடற் கல்வித்துறை ஆசிரியர்களுக்கு செயல்முறைப் பயிற்சிகள் அவசியம்

### விளையாட்டு அரங்குகளில்

**யாழ்.** மாவட்டத்தில் விளையாட்டுத்துறையின் பின்னடைவு பற்றி நாம் பல விடயங்களைச் சுட்டிக்காட்டிவந்துள்ளோம். இந்த வகையில் மேலும் சில குறைபாடுகள் பாடசாலை மட்டத்தில் நிலவி வருகின்றமை இப்போது அறியவந்துள்ளது.

பாடசாலை மட்டத்தில் உடற்கல்வி ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை காரணமாகப் பாடசாலைகளில் விளையாட்டுத் துறையில் பெரும் பின்னடைவுகள் எதிர்நோக்கப்படுகின்றன.

ஒருகால கட்டத்தில் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் வேறு பாடங்களுக்கு நியமனம் பெற்றவர்களும் நியமனம் பெற்ற பாடத்தைவிட்டு உடற்கல்வி பயிற்சி நெறியைப் பூர்த்திசெய்து வெறியேற வாய்ப்பளிக்கப்பட்டது. இதன்மூலம் குறிப்பிட்ட பலர் தமது நியமனம் பெற்ற பாடத்தை விட்டு உடற்கல்விப் பாடத்தைக் கற்று

## பாடசாலை மட்ட விளையாட்டுத்துறை உடற்கல்வி ஆசிரியர்களிலேயே தங்கியுள்ளது

வெளியேறியுள்ளார்கள்.

அதாவது உடற்கல்விப் பாடம் விளையாட்டாகக் கருதப்பட்டு, தெரிவு செய்யப்பட்டு கற்றுவெறியேறியவர்கள் இன்று மாணவர்களின் எதிர்காலத்தில் விளையாடும் ஆசிரியர்களாக உள்ளமை மிகவும் வேதனைக்குரியதாகும்.

சர்வதேச மட்டத்தில் விளையாட்டு என்பது இன்று எல்லோராலும் ரசிக்கப்படும் ஒன்றாகவும் வருமானம் மிக்க துறையாகவும் வளர்ச்சி கண்டுள்ளது.

இதேபோன்று இலங்கையிலும் அது மிகவும் பிரபல்யம் பெற்றுள்ளது. கிரிக்கெட் உதைபந்தாட்டம், கால்பந்தாட்டம் உட்படப் பல விளையாட்டுகளுக்கு இலங்கையில் பெரும் மதிப்பு உள்ளது. உடற்கல்வி ஆசிரியர்களாக கடந்த காலத்தில் வெளியேறியவர்களில் சிலர் தமது கடமைகள், பொறுப்புக்களை செயற்படுத்த உரிய தகுதி உடையவர்களா? என்ற கேள்வி மாணவர்கள் மத்தியிலும் சமூக மட்டத்திலும் தற்போது எழுந்துள்ளது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளில் உள்ள ஆசிரிய விரிவுரையாளர்களின் தகுதிகள், திறமைகள் தொடர்பாகவும் தற்போது பல்வேறு விமர்சனங்கள் எழுந்துள்ளன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக உடற்கல்வி அலகில் இரண்டு வருட உடற்கல்வி பயிற்சி நெறியை முடித்து ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட அளவு மாணவர்கள் வெளியேறி வருகின்றனர்.

இந்த மாணவர்களில் ஒரு பகுதியினர் ஆசிரிய நியமனம் பெற்று ஆசிரிய கலாசாலை சென்று பயிற்சி பெற்ற சான்றிதழுடன் வெளியேறியுள்ளார்கள்.

யாழ்.மாவட்டத்தில் இவர்கள் நியமனம் செய்யப்படாமல் வெளிமாவட்டங்களுக்கே நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். தற்போதைய நாட்டுச் சூழ்நிலைகாரணமாக சிலர் யாழ்.மாவட்டப் பாடசாலைகளிலும் இணைக்கப்பட்டுள்ளார்கள்.

கடந்த காலத்தில் ஆசிரிய நியமனம் என்பது அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன. இதே போன்று 90ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு தொகுதி ஆசிரியர்கள் 'ஜனசவிய' திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டனர்.

இன்றும் கூட ஆசிரிய நியமனத்தில் அரசியல் செல்வாக்கு செலுத்தினாலும் பகிரங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டும் அதன் அடிப்படையில் நியமனங்கள் இடம் பெறுகின்றன.

ஆசிரியர்கள் கலாசாலைகளில் ஆசிரிய மாணவர்கள் விளையாட்டுப் போட்டிகளுக்கு மட்டும் மைதானத்திற்கு சென்றால் போதுமானது என்ற நிலை மாற்றப்பட வேண்டும். செயல்முறைப் பயிற்சியென்பது மைதானத்தில் இடம்பெற வேண்டும். அதற்கான சரியான பயிற்சிகளும் ஒழுங்கு முறைகளும் கலாசாலைகளில் செய்யப்பட வேண்டும். அவர்கள் ஏற்கனவே உடற்கல்வி கற்றவர்கள் என்றுகாரணம் காட்டி இவற்றை நிறுத்திவிட முடியாது.

இதன் மூலம் பாடசாலைகளிலும் அந்த ஆசிரியர்கள் மாணவர்களின் விளையாட்டுத்துறைகளில் அதிக அக்கறையுடனும் ஈடுபாட்டுடனும் செயற்படுவார்கள். குடா நாட்டில் இப்போது விளையாட்டுத்துறை மிகவும் பின்தங்கிய நிலைக்குச் சென்று கொண்டிருக்கின்றது. அதற்கு இங்கு நிலவும் அசாதாரண சூழ்நிலை ஒரு காரண


தீவக வலய உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 18 வயதுப் பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி அணி சம்பியனானது. அந்த அணியின் வீரர்கள் கல்லூரி அதிபர் அருட்திரு ஏ.ஜேசுதாஸ் மற்றும் அணியின் பயிற்றுவிப்பாளர், ஆசிரியர்கள் ஆகியோருடன் எடுத்துக் கொண்ட படம் இது.

மாக இருந்தாலும் பாடசாலை மட்டத்தில் விளையாட்டுத்துறை தூக்கி நிமிர்த்தப்பட வேண்டியதாக உள்ளது. அந்தப் பொறுப்பு பாடசாலைகளிலுள்ள உடற்கல்வி ஆசிரியர்களுக்கே உரியது.

ஆசிரியர் கலாசாலைகளில் செயல் முறைப் பயிற்சிகள் ஒழுங்கான முறையில் வழங்கப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு பல்வேறு தரப்புக்களிடம் இருந்தும் எழுந்துள்ளது. இதன் காரணமாகப் பாதிக்கப்படப்போவது பாடசாலை மாணவர்களே. ஆசிரியர்களுக்குச் சிறந்த பயிற்சிகள் வழங்கப்படாமல் மாணவர்களின் விளையாட்டுத்துறை முன்னேற்றம் காணாது.

பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் எமது மாணவச் செல்வங்கள் கல்வியிலும் விளையாட்டிலும் தமது திறமைகளை இயன்றவரை வெளிப்படுத்தி வருகின்றார்கள்.

இந்த மாணவர்களின் எதிர்காலம் வளமுடையதாகவும் ஆற்றல் மிக்கதாகவும் அமைய வேண்டும் என்பதே அனைவரதும் நோக்கமாகும். இந்த வகையில் எதிர்கால சிற்பிகளை செதுக்கி வடிவமைக்கும் பொறுப்பும் கடமையும் ஆசிரிய சமூகத்திடமே உண்டு. அத்திபாரம் உரிய முறையில் கட்டப்பட்டால்தான் கட்டடம் சிறப்பாகக் கட்டி முடிக்கப்படும். அந்த அத்திபாரத்தை உரிய முறையில் அமைக்கும் பொறுப்பு ஆசிரியர்களுடையதே.

எனவே ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைகள் இந்த உடற்கல்வி ஆசிரியர்கள் விடயத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும். ஏனைய பாடங்களில் ஆசிரியர்கள் வெறுமனே புத்தகப்படிப்பை மட்டும் மேற்கொண்டால் போதுமானது. ஆனால் உடற்கல்வி அவ்வாறு இல்லை. அதற்கு உரிய செயல்முறைப் பயிற்சிகள் சரியான முறையில் கற்பிக்கப்பட வேண்டும். இதனால் ஆசிரியர்களும் கூடிய கவனம் கொண்டு மாணவர்களுக்கு அதனைப் பயிற்றுவிப்பார்கள். எனவே உரிய அதிகாரிகள் இந்த விடயத்தில் அக்கறை காட்டி ஆசிரியர் கலாசாலைகளில் உடற்கல்வி ஆசிரியர்களுக்குச் செயல்முறைப் பயிற்சிகள் வழங்கப்படுவதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். ★

**விண்ணன்**

## குள்ள நடிகரின் கின்னஸ் சாதனை

'டிஷ்யூம்' படத்தில் நடித்து அனைவரது கவனத்தையும் தன்பக்கம் இழுத்த குள்ள நடிகர் பக்ரீ, 'கின்னஸ்' சாதனை படைத்துள்ளார்.

குள்ள நடிகரான பக்ரூ முதன்முறையாக கதாநாயகனாக நடித்து இந்த சாதனையைப் படைத்து 'கின்னஸ்'இல் இடம்பிடித்துள்ளார்.

பக்ரூவின் இயற்பெயர் அஜய்குமார். வினயன் இயக்கத்தில் 'அற்புதத் தீவு' படத்தில் இவர் நடித்திருந்தார்.

## தேவைப்படின் இந்தியாவும் அணுசோதனை நடத்தும் என்று அமைச்சர் முகர்ஜி அறிவிப்பு

புதுடில்லி,டிசெ.8

''தேவைப்படின் இந்தியா அணு ஆயுதச் சோதனையை நடத்தும்'' என்று மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் எட்டப்பட்டு அமுல்படுத்தப்படாமல் சர்ச்சையில் சிக்கியிருக்கும் 123 என்ற அணுசக்தி ஒப்பந்தத்துக்குப் பல்வேறு தரப்புகளிடமிருந்து எதிர்ப்புகள் கிளம்பியிருக்கும் நிலையில், மத்திய அரசிடமிருந்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்திய - அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தம் குறித்து மாநிலங்களவையில் அண்மையில் நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார் எனப் புதுடில்லிச் செய்திகள் கூறுகின்றன.

''உலகளாவிய அரசியல் சூழ்நிலையில் அணுஆயுதச் சோதனை நடத்தும் அவசியம் ஏற்பட்டால் நிச்சயம் அதை நடத்துவோம்'' - என்றார் பிரணாப்.



அணு வாயுதச் சோதனை நடத்தினால் அதனால் சில பாதிப்புகள் ஏற்படக்கூடும் என்றும் அவர் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

உலகளாவிய அணுவாயுதத் தடுப்பில் இந்தியா உறுதியுடன் உள்ளது என்று கூறிய பிரணாப் முகர்ஜி, பெரியளவில் அணுவாயுதம் வைத்திருப்பதில் இந்தியாவுக்கு நம்பிக்கை இல்லை - என்றும் அறிவித்தார்.

(சி)

## வவுனியா ரயில்சேவை வழமைக்குத் திரும்பியது

கொழும்பு, டிச. 07

கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளை அடுத்து பாதுகாப்பு காரணங்களுக்காக இடை நிறுத்தப்பட்டிருந்த - வவுனியாவுக்கான - ரயில் சேவைகள் நேற்று முன்தினம் காலை மீண்டும் வழமைக்குத் திரும்பின.

ஜனாதிபதி ரயில்வே திணைக்கள அதிகாரிகளுக்கு விடுத்த பணிப்புரை அடுத்தே வவுனியா வரையான ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன என்று ரயில்வே திணைக்கள அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

கடந்த புதன்கிழமை இரவு இரண்டு ரயில்கள் வவுனியாவைச் சென்றடைந்தன. நேற்று முன்தினம் காலை தொடக்கம் அனைத்து ரயில்களும் வவுனியாவில் இருந்து கொழும்புக்கு வழமை போல சேவையில் ஈடுபட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்புக் குண்டுவெடிப்புச் சம்பவங்களை அடுத்து கடந்த வாரம் தொடக்கம் கொழும்புக்கும் வவுனியாவுக்குமான ரயில் சேவை அநுராதபுரத்துடன் நிறுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக வவுனியாவுக்குச் செல் லும் ரயில் பிரயாணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (சி)

## அமைச்சர் தம்மைத் திருமணம் செய்யக்கோரி மருத்துவ மாணவிகள் புதுவித போராட்டம்!

புதுடில்லி,டிசெ.8

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் கட்டாயம் ஒரு வருடம் கிராமத்தில் பணியாற்ற வேண்டும் என்ற மத்திய அரசின் திட்டத்துக்கு எதிராகப் போராட்டம் நடத்திவரும் மாணவிகள் நூதன முறையில் தமது போராட்டத்தை முன்னெடுத்துச்செல்கின்றனர்.

மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் அன்புமணி, தங்களைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என மும்பை மருத்துவ மாணவிகள் போராட்டம் நடத்திவருகின்றனர்.

மருத்துவ மாணவர்கள் ஓராண்டு கிராமப் பகுதியில் மருத்துவ சேவை செய்வதைக் கட்டாயமாக்கி அவர்களின் கல்விக் காலத்தை ஓராண்டு அதிகரிக்க மத்திய சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது. இதற்கு நாடு முழுவதும் உள்ள மருத்துவ மாணவர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். பலவித போராட்டங்களையும் நடத்தி வருகின்றனர்.

அதில் புதுவிதமாக, ''அன்புமணி எங்களைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும்; எங்களுடன் கிராமப் பகுதிக்கு வந்து எங்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும்'' என்ற கோரிக்கைகள் அடங்கிய பதாதைகளுடன், கையில் ரோஜா மலர்களுடன் போராட்டத்தில் குதித்துள்ளனர் மும்பை மருத்துவக் கல்லூரி மாணவிகள். மருத்துவ மாணவர்களின் இந்த புதுவித போராட்டம் தேசிய அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கதே.

## நவம்பரில் 73 பொதுமக்கள் படுகொலை; புலிகளின் சமாதானச் செயலகம் தகவல்

கிளிநொச்சி,டிசெ.8

இலங்கை இராணுவத்தால் கடந்த நவம்பர் மாதம் 73 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். 27 பேர் காணாமல் போயுள்ளனர் என விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

வன்னியில் வான்வழித் தாக்குதல்களாலும் கிளைமோர் தாக்குதல்களாலும் 27 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் இராணுவத்தால் இயக்கப்படும் குழுக்களால் 21 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

வான்வழித் தாக்குதல்கள் மற்றும் கிளைமோர் தாக்குதல்களில வன்னிப் பிரதேசத்தில் சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள்.

இதில் இரு வைத்திய சாலை, [illegible] ஒன்று, பாடசாலை ஒன்று, புலிகளின் குரல் வானொலி நிலையம், ஐ.நா.வின கட்டடம் ஒன்று, சர்வதேச அரசசார்பற்ற நிறுவனக் கட்டடம் மற்றும் வீடுகள் முற்றாக நாசமாக்கப்பட்டுள்ளது என்றும் சமாதானச் செயலகம் தெரிவித்துள்ளது.(202)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை
## கரவெட்டி
# பரிசளிப்பு விழாவும் கௌரவித்தல் நிகழ்வும்- 2007

### வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை



பள்ளிக்கூட மாணவர்க ளின் அடைவைத் தேசிய மட்டத் தில் அளவிடும் பொதுப்பரீட் சையில் 5 ஆம் தரப் புலமைப் பரிசிற் பரீட்சை முக்கியம் வாய்ந்த ஒன் றாகும். வருமானம் குறைந்த மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் நிதி வழங்கி ஊக்குவிப் பதும் தெரிவு செய்யப் பட்ட பாடசாலைகளில் அனு மதி வழங்குவதும் இதன் இரு பிரதான இலக் குகளாகும். வடமராட்சி வலயத்தில் இப் பொதுப் பரீட்சை யில் அதிகூடிய மாணவர்களைச் சித்தி யெய்த வைத்த பெருமை யா/நெல்லியடி மெ.மி. த.க.பாடசாலைக் குரியது. இப்பாடசாலையி லிருந்து பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 31 பேர் இவ் வாண்டிற்கான வெட்டுப் புள்ளிக்கு மேல் புள்ளிகளைக் பெற்றுச் சாதனை படைத்துள்ளனர். இச்சாதனை படைத்த மாணவர்கள் தொடர்ந்துவரும் பொதுப் பரீட்சைகளிலும் சாதனை படைக்க வாழ்த்துகின் றேன். இம்மாணவர்களின் சாதனைக்குத் துணை நின்ற ஆசிரியர்களுக்கும் இவ் வாசிரியர்களை நெறிப் படுத்திய பள்ளி முதல்வருக்கும் எனது பாராட்டுக் கள்.

வ.செல்வராசா,

### அதிபரின் வாழ்த்துச் செய்தி



இவ்வாண்டு ஐந்தாம் தரப்புலமைப்பரிசில் பரீட் சையில் 30 மாணவர்கள் எமது பாடசாலையில் இருந்து சித்தியடைந்துள்ளார்கள். இதன் மூலம் எமது பாடசா லைக்கும் யாழ்ப்பாணக் கல்விச் சமூகத்திற்கும் அவர்கள் பெருமை சேர்த்துள்ளார்கள். இதையிட்டு நான் பெருமை யும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். இவர்களை பாராட் டுவதற்காக இன்று எடுக்கப்படும் விழா ஏனைய மாணவர் களுக்கும் ஒரு உந்து சக்தியாக- எடுத்துக் காட்டாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் சார்பில் நான் இந்த மாணவர்களைப் பாராட்டுகின் றேன்.

ஐ.நடராசா.



யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலை அதிபர், ஆசிரியர் குழாம்.

### பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி



யா/நெல்லியடி மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாட சாலை ஆரம்பக் கல்வியில் வட மராட்சி கல்வி வலயத்தின் முன் னணி பாட சாலைக்குள் ஒன்றாக விளங்கி வருகின்றது. வருடந் தோறும் நடைபெறும் புலமைப் பரி சில் பரீட்சையில் இப்பாட சாலை மாணவர்கள் சிறந்த பெறு பேறு களைப் பெற்று முன்னணியில் இருப்பது குறிப்பிடத்தக் கதாகும். இப்பாடசாலை கல்விச் செயற்பாடுகளிலும் ஏனைய புறகிருத்திய செயற்பாடுகளிலும் தமது திறமை களை வெளிக்காட்டுவதன் ஊடாக தனித்து வத்தினை பேணி வருகின்றது. இப்பாடசாலையின் வெற்றிக்கு காரணமாக இருக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர் கள், பெற்றோர்களை பாராட்டுவதுடன் எதிர்வரும் காலங்களில் இன்னும் பல கல்விச் சாதனைகளைப் புரிந்து, அறிவும், ஒழுக்கமும், சமுகவிழுமியங்களை மதிக்கும் உயர்ந்த பண்பும் உடைய மாணவ சமுதாயம் உருவாக் குவதற்குரிய வழிகாட்டலை அனைவரும் ஒன்றிணைந்து மேற் கொள்ள வேண்டுமென வேண்டி நிற்பதுடன் இம் மாணவர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக அமைய எல்லாம் வல்ல இறைவனின் பேரருள் கிடைக்க வேண்டு மெனப் பிரார்த்திக்கின்றேன்.

சி.சத்தியசீலன்,
பிரதேச செயலாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு, கரவெட்டி.



2007 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுடன் அதிபர் , ஆசிரியர்கள்.



2007 வடமராட்சி வலயத்தினால் நடத்தப்பட்ட சிறுவர் அரங் கப்போட்டியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட மாணவர் களுடன் அதிபரும் நெறிப்படுத்திய ஆசிரியர்களும்.



2007 ஆங்கிலதின சிறுவர் நாடகப்போட்டியில் வடமராட்சி வல யமட்டத்தில் முதலாமிடத்தையும், மாவட்ட மட்டத்தில் மூன்றாம் இடத் தையும் பெற்றுக்கொண்ட மாணவர்களுடன் அதிபரும் நெறிப்படுத்திய ஆசிரியர்களும்.



2007 சிரேஷ்ட குருளைச் சாரண மாணவர்குழு- மாவட்டச் சம்பி யன். பாடசாலை அதிபர், சாரண ஆசிரியர்களுடன் சாரணர் குழு.





சி.சாகித்யா



ஞா.பிரவீனா

மாகாணமட்ட ஆங்கிலதினப் போட்டி

2003 சி.சாகித்யா (பாவோதல்) மூன்றாமிடம், 2004 ஞா.பிரவீனா (சொல்வதெழுதல்) முதலாமிடம்

பாடசாலை ஆங்கிலதின நாடகப்போட்டியில் "Snow white" கோட்ட, வலயமட்டத்தில் முதலாம் இடத்தையும் மாவட்ட மட்டத்தில் 3 ஆம் இடத்தையும் பெற்றுப் பெருமை சேர்த்த மாண வர்கள்- 2007



2006 IWMS [illegible]

## 2007 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள்



ச.தனுசன் -புள்ளி 177 | வ.திருபரன் - புள்ளி 168 | கி.மாதுளா- புள்ளி 168 | மு.விவேகா - புள்ளி 168 | சி.சிவசங்கர்-புள்ளி 165 | ம.தயானந் - புள்ளி 164 | கி.அபிநயன் -புள்ளி 162 | ச.கஜானன்- புள்ளி 161



ந.சிந்துஜா-புள்ளி 161 | யோ.இராகவன்- புள்ளி 160 | ஜோ.ஹம்சத்வனி -புள்ளி 158 | ம.மதன்ராஜ் - புள்ளி 157 | ர.கன்யா - புள்ளி 156 | வி.தனன்- புள்ளி 156 | சு.நம்சாயினி- புள்ளி 155 | தே.கலைமகள்- புள்ளி 153



கு.தனுசியா -புள்ளி 153 | ச.பாமதி- புள்ளி 152 | நா.திருபரன்- புள்ளி151 | ஜெ.கிரோதா- புள்ளி 151 | சி.செந்தூரன்- புள்ளி 149 | ம.வினேஸ்வரன்-புள்ளி 148 | ரி.அநிந்திதை- புள்ளி 148 | ச.சுதர்சன் -புள்ளி 147



சி.அபிநயா -புள்ளி 147 | ம.அனுசியா -புள்ளி 145 | ஜெ.அனோஜன் -புள்ளி 144 | தே.தர்ஷன் -புள்ளி 144 | கி.தர்சனா-புள்ளி 144 | சி.கஸ்தூரி- புள்ளி 143 | ச.கிருந்திகா -புள்ளி 143

(சி/54639)

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இ.தொ.காவின் செயற்பாடு

தலைநகர் கொழும்பிலும் சுற்றுப்புறங்களிலும் கடந்த சில நாள்களாக வகை தொகையின்றி கைது செய்யப்பட்டு இன்னும் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்களின் விவரப் பட்டியலை நாளை மறுதினம் சமர்ப்பிக்கும்படி உயர் நீதிமன்றம் பொலிஸாருக்குக் கட்டளை பிறப்பித்திருக்கின்றது.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்றே இந்த உத்தரவை உயர்நீதிமன்றம் பிறப்பித்திருக்கின்றது.

இந்த விடயங்களை ஒட்டி, மலையகத் தமிழரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் செயற்பாடு குறித்து தமிழர் தரப்பில் பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்படுவதால் அது குறித்து இப்பத்தியில் சிலவற்றைச் சுட்டிக்காட்டுவது பொருத்தமானது.

மலையகத் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இரண்டு முக்கிய கட்சிகளுமே - இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி ஆகிய இரண்டுமே - அரசில் அங்கம் வகிக்கின்றன. அந்த நிலையிலேயே தமிழர்கள் - வேறு ஏதேனும் காரணமின்றி தமிழர்கள் என்பதற்காக - இவ்வாறு வகை தொகையின்றி அள்ளப்பட்டிருக்கின்றார்கள்.

அப்படிக் கண்மூடித்தனமான கைதுகளை மேற்கொண்ட இலங்கை அரசுப் படைகள் தமிழர்களை வேறுபடுத்தாமல் முழுத் தமிழரையுமே ஈவு, இரக்கமின்றி அள்ளிச் சென்றன. வடக்கு, கிழக்கு மற்றும் தென்னிலங்கையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட ஈழத்தமிழர்களை மட்டுமல்லாமல், மலையகத் தமிழர்களும் வகை தொகையின்றிக் கைது செய்யப்பட்டார்கள்.

தமிழர்கள் மீதான இக்கொடூரம் குறித்து - மலையகத் தமிழர்கள், வடக்கு, கிழக்குத் தமிழர்கள் என்ற வேறுபாடின்றி - அனைவருக்காகவும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளுமே ஒன்றுபட்டுக் குரல் கொடுத்தன. அரசில் இடம்பெற்றுள்ள இ.தொ.கா., ம.ம.முன்னணி இரண்டும் ஜனாதிபதியை நேரில் சந்தித்தும் இது குறித்து ஆட்சேபம் தெரிவித்துப் பேசின. அந்தச் சந்திப்பின்போது, கைது செய்யப்பட்ட மலையகத் தமிழர்களை விடுவிப்பதற்கு ஜனாதிபதியுடன் இ.தொ.கா. இணக்கம் கண்டது என்றும், அப்படித் தமிழர்களில் ஒரு பிரிவினருக்காக மட்டும் இ.தொ.கா. உடன்பாடு கண்டது தவறு என்றும் சில வட்டாரங்களில் சர்ச்சை கிளப்பப்பட்டது.

அவ்வாறு தனது மக்களுக்காக மட்டும் இ.தொ.கா. ஜனாதிபதியுடன் பேசி இணக்கம் கண்டதா என்பது கேள்விக்குரியதே. அப்படிக் கண்டிருந்தாலும் கூட அச் செயற்பாடு விமர்சிக்கத்தக்கதா என்பதே கேள்வி.

அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு மிகவும் பின்தங்கிய நிலையில் வாழும் தமிழர்கள் மலையக மக்கள். அவர்களையே இ.தொ.காவும், மலையக மக்கள் முன்னணியும் முக்கியமாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. அந்த மக்களுக்கோ அல்லது அவர்களின் கட்சிகளுக்கோ வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு உள்ளது போன்ற ஆயுதப் பலத்தோடு கூடிய பின்புல வலிமை ஏதும் இல்லை. வெறுமனே ஜனநாயக முறையிலான நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் மட்டுமே அவர்களிடம் உள்ள அரசியல் வலிமை. அதைக்கொண்டு தமது மக்களைக் காப்பாற்ற என்ன செய்ய முடியுமோ அதைத்தான் அவர்களின் பிரதிநிதிகள் செய்யமுடியும். செய்ய வேண்டும்.

இந்த நாட்டின் அடுத்த தலைவர் யார், நிறைவேற்று அதிகாரம் யாரிடம் ஒப்படைக்கப்படப் போகின்றது என்பதையெல்லாம் தீர்மானிக்கும் தேர்தல் 2005 நவம்பரில் நடந்தபோது இந்தக் கட்சிகள் இரண்டுமே ரணிலின் பக்கம் நின்றன. மஹிந்த ராஜபக்ஷ தேர்வானால், சிங்களப் பெரும்பான்மையினர் மத்தியில் வாழும் தங்கள் பாடு பெரும் சிரமம் என்பதால், தங்களின் நலனையும் கருத்தில் கொண்டு தீர்மானம் எடுக்கும்படி மற்றைய தமிழ்ச் சகோதரர்களை, மலையகத் தமிழரின் பிரதிநிதிகள் அச்சமயம் திரும்பத்திரும்பக் கோரினார்கள். ஆனால் என்ன நடந்தது? வடக்கு, கிழக்குத் தமிழர்களின் தீர்மானத்தால் மலையகத் தமிழர்களின் முழு விருப்புக்கும் மாறான ஆட்சி நிர்வாகம் திணிக்கப்பட்டு இன்று, அவர்களும் சேர்ந்து அல்லல்படுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கின்றது என்பதே மலையகத் தமிழ்த் தலைவர்களின் விசனம்.

ஜனாதிபதித் தேர்தல் சமயத்தில் வடக்கு, கிழக்குத் தாயகம் என்று தனியாகப் பிரிந்துநின்று முடிவெடுத்து, எங்கள் நலனைக் கைவிட்டுவிட்டு, இப்போது தமிழர்கள் ஒன்றாக அள்ளப்படும் சமயத்தில் எமது மக்களுக்காக அவர்களது பிரதிநிதிகளான நாங்கள் நடவடிக்கை எடுக்கும்போது, பாதிப்புற்ற தமிழர்கள் மத்தியில் ஐக்கியத்தைக் கைவிட்டு பிரிந்து வேலை பார்க்கிறோம் என எம் மீது குற்றம் சுமத்துவது சரியா என மலையகத் தமிழ்த் தலைவர்கள் சிலர் சீற்றத்துடன் கேள்வி எழுப்புவதிலும் நியாயம் இல்லாமல் இல்லை. அதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

என்றாலும், மலையகத் தமிழர்கள், வடக்குக் கிழக்குத் தமிழர்கள் என்று பிரித்துப் பார்க்காமல் 'தமிழர்கள் வகை தொகையின்றி - ஈவு, இரக்கமின்றிக் கைதுசெய்யப்பட்டனர்.' - என அனைத்துத் தமிழர்களுக்குமாகவே இ.தொ.கா. தனது மனுவில் குறிப்பிட்டு நீதிமன்றில் குரல் எழுப்பியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

ஆனால் அரசுக்குள் இடம் பெற்றுக் கொண்டு, ஜனாதிபதியின் தலைமையில் அமைச்சரவையில் அங்கமும் வகித்துக்கொண்டு, அரசுக்கும் ஜனாதிபதிக்கும் எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குப் தொடுத்துள்ள இ.தொ.கா. தலைமையின் செயற்பாட்டைத்தான் புரிந்துகொள்ள முடியாதிருக்கின்றது.

அவசரகாலச்சட்ட நீடிப்பு மீதான வாக்கெடுப்பு சமயம் சபையில் பிரசன்னமாகாமல் ஒளித்துக்கொண்டு, பாதுகாப்பு அமைச்சு மீதான நிதி ஒதுக்கீடு மீதான வாக்கெடுப்புக்கு ஓர் எம்.பியை மட்டும் ஆதரித்து வாக்களிக்க அனுப்பிக்கொண்டு, மறுபுறம் அரசில் இருந்தவாறே அரசுக்கு எதிராக வழக்குப்போடும் நியாயத்தைத்தான் புரிந்துகொள்ள முடியவில்லை..

அரசின், அரசுத் தலைமையின் இத்தகைய குரூரமான - இன ஒதுக்கல் போக்கிலான - நடவடிக்கைக்காக அரசுத் தலைமை மீது உயர்நீதிமன்றத்திலேயே குற்றம் சுமத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்றளவுக்கு நிலைமை சென்ற பின்னர், அரசுடன் ஒட்டிக்கொண்டிருப்பது, தட்டுஏந்தி எதற்கோ காத்திருப்பது போன்ற எண்ணத்தை அல்லவா தருகின்றது?

# காணாமற்போன தென்மராட்சி மாணவி பெற்றோரிடம் நேற்று ஒப்படைப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.08

தென்மராட்சிப் பகுதியில் பாடசாலைக்கு சென்றவேளை காணாமற்போன 10 வயது மாணவி, மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் ஒப்படைக்கப் பட்டார்.

சாவகச்சேரி, பெரியமாவடி, வித்தகத்தைச் சேர்ந்த பாக்கியராசா பிரதீபா (வயது 10) என்ற மாணவி கடந்த 4 ஆம் திகதி பாடசாலைக்குச் சென்ற பின் னர் மூன்று நாள்களாக வீடு திரும்பாது காணாமற் போயிருந்தார்.

அந்த மாணவி யாழ். செயலக வாசலில் நின்று அழுதுகொண்டு நின்ற தாகவும்-

அந்த மாணவியை அழைத்துச் சென்று தங்கவைத்திருந்தாகவும்- சுன்னாகம் தெற்கு, சபாபதிப்பிள்ளை வீதியைச்சேர்ந்த ஒருவர் ஆணைக்குழு வில் தெரிவித்தார்.

அவர்ஒப்படைத்தமாணவிபெற்றோருடன் நேற்று கையளிக்கப்பட்டார்.

# பிரமுகர்களின் பயணங்களுக்காக பல மணி நேரம் பாதைகளை மூடுவதா?

## ஐ.தே.க.செயலாளர் சபையில் கேள்வி

கொழும்பு, டிசெ.08

அரசியல் செல்வாக்குப்படைத்த பிரமுகர்களின் சில நிமிட பிரயாணத்திற்காக பல மணி நேரங்கள் பாதைகளை மூடி பொதுமக்களை பெரும் சிரமத்திற்குள்ளாக்குகின்றதுஇந்த அரசு.

- இப்படிக் குற்றம் சுமத்துகின்றார் ஐ.தே.கட்சியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் செயலாளருமான திஸ்ஸ அத்தநாயக்க.

நேற்று நாடாளுமன்றத்தில் பெருந்தெருக்கள், போக்குவரத்து அமைச்சுகளுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இப்படிக் கூறினார்.

புதிய பாதைகளை அமைக்கவும், பழைய பாதைகளை அபிவிருத்திசெய்யவும் வேண்டியது பொறுப்பு அரசின் கடமை.

ஆனால், இந்த அரசு இருக்கும் பாதைகளையும் மூடிவிடுகின்றது. ஒரு சில அரசியல் செல்வாக்குடைய பிரமுகர்கள் பயணம் செய்கின்றனர் என்று கூறி பிரதான பாதைகளைப் பல மணி நேரமாக மூடி வைத்து விடுகின்றனர். மற்றும் சில பாதைகளை நிரந்தரமாகவே மூடப்பட்டுள்ளனர்.

இதனால், பாடசாலை மாணவர்கள், நோயாளர்கள் உட்பட பொதுமக்களும் அவசர தேவைகளுக்காக செல்ல வேண்டியர்களும் பல மணி நேரம் காத்திருந்து கஷ்டப்படவேண்டியுள்ளது.

இது மட்டுமல்ல, வீதிக்கு வீதி பாதைத் தடைகளும், சோதனைச் சாவடிகளை அமைத்து அப்பாவிப் பொதுமக்களை பாதுகாப்புப்படையினரால் அவசியமற்ற கெடுபிடிக்கு உள்ளாக்குகின்றனர்.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் இந்தப் பாதைத் தடைகளும், சோதனைச் சாவடிகளும் நீக்கப்பட்டுள்ளன.

இந்தச் சோதனைச் சாவடிகளை நீக்கும்படி நாம் கேட்டிருந்தால், நாம் புலிகளுக்கு ஆதரவாக செயல்படுகின்றோம் என்று எம்மீதும் புலிச்சாயம் பூசி விடுவீர்கள்-என்றார் (சி)

# வெளிநாட்டிலிருந்து வந்த மூன்றுபேரைக் காணோம்

கொழும்பு, டிசெ.08

சவூதி, மலேசியா ஆகிய நாடுகளிலிருந்து இம்மாதம் முதலாம், இரண்டாம் திகதிகளில் கொழும்புக்கு வந்த மன்னார் முருங்கனைச் சேர்ந்த 3 தமிழ் இளைஞர்கள் இதுவரை வீடு திரும்பவில்லை - என்று தெரிவிக்கப்படுகிறது.

முருங்கன் நகரப்பகுதியைச் சேர்ந்த அன்ரனி ஜோன்சன் (வயது - 22) என்ற இளைஞன் கடந்த முதலாம் திகதி மலேசியாவிலிருந்து வந்தவர் என்றும் -

முருங்கன், செம்மண் தீவுப் பகுதியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் சுரேந்திரன் (வயது - 32) என்ற குடும்பஸ்தர் கடந்த 2ஆம் திகதி சவூதியிலிருந்து வந்தவர் என்றும் -

முருங்கன், சுண்டிக்குளிப்பகுதியைச் சேர்ந்த மாதா அடிமை கிறிஸ்தோப்பர் (வயது - 34) என்ற குடும்பஸ்தரும் கடந்த 2 ஆம் திகதி சவூதியிலிருந்து வந்தவர் என்றும் -

அவர்களின் உறவினர்கள் மன்னார் சகவாழ்வு மன்றத்தில் முறைப்பாடு செய்திருக்கின்றனர்.

இதேவேளை, கடந்த 2 ஆம் திகதி மன்னார் நகரிலிருந்து வவுனியா நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த மன்னார்,உப்புக்குளத்தைச் சேர்ந்த அருளானந்தம் அற்புதராஜா (வயது - 36) என்ற குடும்பஸ்தரும் இதுவரை வீடுதிரும்பவில்லை - என்று அவர்களின் உறவினர்கள் தெரிவித்திருக்கின்றனர். (சி)

---

## யுனெஸ்கோ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'யுனெஸ்கோ' செயலாளர் நாயகத்தைச் சந்தித்தார் என்றும் -

அப்போதே இந்த விவகாரம் குறித்து மீளாய்வு செய்ய செயலாளர் நாயகம் இணங்கினார் என்றும் -

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இலங்கை வெளிவிவகார அமைச்சரின் பணிப்புரைக்கிணங்க, தூதுவர் வாகீஸ்வரா இது விடயத்தில் இலங்கையின் நிலைப்பாட்டைப் பணிப்பாளர் நாயகத்துக்கு மீள வலியுறுத்தியுள்ளார்.

'புலிகளின் குரல்' வானொலி நிலையம் சிவில் இலக்கு என்ற 'யுனெஸ்கோ' செயலாளர் நாயகத்தின் கருத்தில் மாற்றம் செய்யப்படவேண்டும் என அவர் வலியுறுத்தினார் என்றும் கூறப்பட்டது.

## நாளை

| | |
|---|---|
| கார்த்திகை - 23 | ஞாயிற்றுக்கிழமை 09.12.2007 |
| திதி : அமாவசை | மு.இ 11.43 |
| நட்சத்திரம் : | அனுஷம் மு.ப 10.58 |
| சுபநேரம் | 9.18 - 10.48 |
| ராகுகாலம் | 4.48 - 06.18 |

அமாவசை விரதம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

---

## அல்லல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் நேரில்பிரச்சினைகளைப்பார்வையிட்டு ஆராய்ந்த இ.தொ.கா. தலைவர்களை அவர் பாராட்டும்வகையில்கருத்து வெளியிட்டார்.

தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விடயத்தில்சட்டவிரோதமானகைதுகள், முறையற்ற தடுத்து வைப்புகள் இடம்பெற்றுள்ளன என்று சுட்டிக்காட்டப்படுவதால் அரசமைப்பின் 13 (1) மற்றும் 13 (11) பிரிவுகளின் கீழ் இந்த மனுக்கள் விசாரிக்கப்பட முடியும் என பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

அதேசமயம், கைது செய்யப்பட்டவர்கள் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தால் அதற்காகத் தனியான மனுக்கள் நீதிமன்றத்தில் புறம்பாகத் தாக்கல் செய்யப்பட முடியும் என்றும் பிரதம நீதியரசர் சுட்டிக் காட்டினார்.

மேற்படி கொடூரக் கைது விவகாரத்தில் சட்டத்தின் சகல கோட்பாடுகளையும் மிகத் துச்சமாகத் தூக்கியெறிந்து அரசும், படைகளும், பொலிஸாரும் செயற்பட்டிருக்கின்றனர் என மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் சுட்டிக்காட்டிய விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுகின்றது என்று தெரிவித்த பிரதம நீதியரசர், யாரும் சட்டவிரோதமான முறையில் கண்மூடித்தனமாகக் கைது செய்யப்படுவதையும் தடுத்து வைக்கப்படுவதையும் அனுமதிக்க முடியாது என்றார்.

# வல்வைக் குடும்பஸ்தரை காணவில்லை

யாழ்ப்பாணம்,டிசெ.08

வடமராட்சியில் குடும்பஸ்தர் ஒருவர் காணாமற் போயுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ் அலுவலகத்தில் அவரது மனைவியால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வல்வெட்டிதுறை, பொலிகண்டி புலவத்தையைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான வேலுப்பிள்ளை சிவயோகராசா (வயது 45) என்பவரே காணாமற் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் கடந்த 5ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டுச் சென்றவர் நேற்றுவரை வீடுதிரும்பவில்லையென முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட் டுள்ளது. (1-68)

# தையல்தொழிலாளியும் குடும்பஸ்தரும் சரண்

யாழ்ப்பாணம்,டிசெ.08

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் யாழ் அலுவலகத்தில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக நேற்றும் இருவர் சரணடைந்துள்ளனர்.

வலிமேற்கு, சங்கானையைச் சேர்ந்த 19 வயதான தையல் தொழிலாளியும் கரவெட்டி கரணவாய் வடக்கு சந்திரங் கூடல் என்னும் இடத்தைச் சேர்ந்த 38 வயதான ஒரு பிள்ளையின் தந்தையுமே சரணடைந்தனர்.

இவர்கள் ஆணைக்குழுமூலம் பொலீசாரிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பாதுகாப்பாக யாழ். சிறைச்சாலையில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். (1-68)

# பாஷையூரில் நாளை மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,டிசெ

யாழ். ல்யன்ஸ் கழகம், யு.என். ஹப்பிற்றாட் நிறுவத்தின் அனுசரணையுடன் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு பாஷயூர் ஜே/64, ஜே/65, கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கென பாசையூர் புனித அந்தோனியார் றோ.கூ.மகளீர் வித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாமை நடத்தவுள்ளது. இதில் பல், கண், இரத்த அழுத்தம், நீரிழிவு, பொதுமருத்துவம் ஆகிய பரிசோதனைகளும் விழிப்புனர்வு கருத்தரங்கும் நடதத்தப் படவுள்ளன. (202)

---

## கருணா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில், கருணா குழு அலுவலகம் மீது நேற்றுத் தாக்குதலைத் தொடுத்தது எனப் படை வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

இதனிடையே, கருணா குழுவினருக்கும் பிள்ளையான்குழுவினருக்கும்இடையில் நேற்று முக்கிய பேச்சு ஒன்று இடம் பெறவிருந்தது என்றும் -

கருணா குழு சார்பில் மங்களம் மாஸ்டர் என்பவர் கலந்துகொள்ளவிருந்தார் என்றும் -

பிள்ளையான் குழு சார்பில் ஜெயம் என்பவர் கலந்துகொள்ளவிருந்தார் என்றும் -

முன்னர் கிடைத்ததகவல்கள்தெரிவித்திருந்தன.

இந்நிலையில், சந்திப்புக்கு முன்னதாக அலுவலகத்துக்குள் அத்துமீறி நேற்று நுழைய முற்பட்ட கும்பல் ஒன்று துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துத் தாக்குதலைத் தொடுத்தது என்றும் -

இதனைத் தொடர்ந்து அங்கு மோதல் மூண்டது என்றும் கூறப்படுகின்றது.

இதையடுத்து அங்கு விசேட அதிரடிப் படையினர்விரைந்துநிலைமையைக்கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர் என்றும் -

சம்பந்தப்பட்ட அலுவலகம் தொடர்ந்தும் பிள்ளையான் குழுவினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது. (சி)

## கைதாகி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தால், அது மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்தின் மனுவில் கூறப்பட்ட விடயங்களையும் கவனித்ததாகும் என நீதிமன்றம் கருதுவதாலும் - இ.தொ.கா. மனுவைத் தொடர்ந்து விசாரணைக்கு ஏற்கவும், மற்றைய மனுவைக் கைவிடவும் நீதிமன்றம் தீர் மானித்தது.

### கைதுகள் கட்டு மிராண்டித்தனமானவை

தமிழர்கள், அவர்கள் தமிழர்கள் என்ற ஒரே காரணத்துக்காக - வேறு காரணம் ஏதுமின்றி - இப்படிக் கைது செய்யப்படுவது காட்டுமிராண்டித் தனமானது, தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் வாதிட்டார்.

அதை அரசுத் தரப்பில் ஆஜரான பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் ஷமிந்ரா பெர்னாண்டோ மறுத்தார். கைதுகள் காரணமின்றி மேற்கொள்ளப்படவில்லை என்றார் அவர்.

அப்படியானால், காரணங்களை இந்த நீதிமன்றத்தின் முன்வையுங்கள் என்று நீதிமன்றில் சவால் விட்டார் மனுதாரர் தரப்புச் சட்டத்தரணி.

இந்நிலையில், கடந்த 28ஆம் திகதிக்குப் பின்னர் இவ்வாறு கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரினதும் பெயர், விவரப் பட்டியலை திங்களன்று சமர்ப்பிக்க அரசுத் தரப்புக்கு உத்தரவிட்ட நீதிமன்றம், அதன் பின்னர் மீண்டும் அடுத்த வெள்ளியன்று இந்த மனு நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படும் எனக் குறிப்பிட்டது.

அச்சமயம், அத்தினம் வரை விடுதலை செய்யப்படாதோர், தடுத்து வைக்கப்பட்டிருப்பதற்கான காரணம் நீதிமன்றுக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்றும் உத்தரவிட்டது.

எதிர்வரும் திங்களும், வெள்ளியும் இந்த மனு நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டாலும் மனு மீதான விசாரணைக்கு புதிய திகதி பின்னர் நிர்ணயிக்கப்படும் என்றும் நீதிமன்றில் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## பிரிட்டிஷ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேட்க யாருமே இல்லை.

உலக நாடுகளின் அமைப்புகளில் சில அமைப்புகள் மட்டும் சிறிலங்கா அரசினுடைய அரச பயங்கரவாதம் உச்ச நிலையை அடைந்தமையை உணர்ந்து ஓரளவாவது மனித உரிமை மீறல்களைப் பற்றிப்பேசி ஓய்கின்றன.

இந்த நிலையில் எமது உடன்பிறப்புகள் மீதான மனித உரிமை மீறல்களை நாம் வாழும் நாட்டின் அரசியல் வாதிகளுக்கும் ஏனைய சமூகத்தவர்களுக்கும் தெரியப்படுத்த பிரித்தானிய நாடாளுமன்றத்தின் முன்றலிலே கவனயீர்ப்பை மேற்கொள்ள உள்ளோம். (அ- 1)

## சண்முகலிங்கன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்திருந்தது. அவர்களின் பெயர்களை மானிய ஆணைக்குழு ஜனாதிபதியின் தெரிவுக்கு அனுப்பியது.

துணைவேந்தர் பதவிக்கு பேராசிரியர் என். சண்முகலிங்கனை நியமித்துள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேற்று பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்ததாகத் தெரியவந்தது.

பேராசிரியர் என். சண்முகலிங்கன் தற்போது யாழ். பல்கலைக்கழகத் சமூகவியல் துறையின் தலைவராகப் பணியாற்றி வருகிறார். (அ - 01)

## பிரதம....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலையில் பிரதம நீதியரசர் சரத் என். சில்வாவை அவரது உத்தியோக பூர்வ அலுவலகத்தில் சந்தித்து சுமார் ஒருமணி நேரத்துக்கும் மேல் உரையாடிக் கொண்டிருந்தார் என்று தெரியவந்தது.

இந்தச் சந்திப்பு முடிந்து, பஸில் ராஜபக்ஷ எம்.பி. அங்கிருந்து வெளியேற முற்பட்ட சமயம் அப்பகுதியில் திடீரெனக் கேட்ட வெடிச் சத்தத்தில் அப்பகுதியில் பெரும் பரபரப்பும், பதற்றமும் ஏற்பட்டன.

ஆனால், அன்றைய தினம் கலியாண நாளை ஒட்டி அப்பகுதியில் வெடிக்கவைக்கப்பட்ட சீன வெடிச்சத்தமே அது என்று கண்டறியப்பட்டதை அடுத்து, பதற்றம் தணிந்தது.

சில தினங்களுக்கு முன்னர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், ஜனாதிபதியின் மற்றொரு சகோதரருமான கோத்தாபய ராஜபக்ஷவும் பிரதம நீதியரசரைச் சென்று சந்தித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்காணிப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்த கூலித் தொழிலாளியான இளைஞனும், பாடசாலை மாணவன் ஒருவரும் நேற்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் சரணடைந்துள்ளனர்.

இருவரும் பின்னர் மனித் உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் கையளிக்கப்பட்டனர்.

அவர்கள் யாழ். பொலிஸாரால் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டு பாதுகாப்பாகத் தங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. (அ - 1-86)

## மின்சாரத்தடை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான் கல்வளையைச் சேர்ந்த கதிரவேல் சிவசுந்தரலிங்கம் (வயது - 55) என்பவரை தமது வீட்டுக்கு அழைத்து வந்திருந்தார்.

சோதிடர் சுபநேரத்தைக் கணித்துக் கொடுத்த பின்னர் கல்வளைக்குச் செல்வதற்காக இருவரும் மாலை ஆறு மணிக்குப் பின்னர் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டனர்.

இவர்கள் சங்குவேலியிலிருந்து கல்வளைக்கு, சண்டிலிப்பாய் வீதியால் பயணித்தபோது மின்தடை காரணமாக இருள் சூழ்ந்தது. அவ்வேளை பார்த்து ஆயுததாரிகள் இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்று அறியப்பட்டது.

சம்பவ இடத்தில் மல்லாகம் நீதிவான் விசாரணைகளை நடத்தினார். பிரேத பரிசோதனையின் பின்னர் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

கடை திறப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்த வர்த்தகர் செ. கஜேந்திரனுக்கு ஆறு நாள்களின் முன்பே குழந்தை கிடைத்தது என்று கூறப்பட்டது. (அ- 1- 50-68)

# மரண அறிவித்தல்கள்

## வல்லிபுரம் தம்பிப்பிள்ளை

*(பிரசித்த நொத்தாரிசு, இளைப்பாறிய ஆசிரியர்)*



அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பிரசித்த நொத்தாரிசும் இளைப்பாறிய ஆசிரியருமாகிய வல்லிபுரம் தம்பிப் பிள்ளை அவர்கள் (5.12.2007) புதன் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் தம்பதிகளின் மகனும் காலம்சென்ற நாகலிங்கம் தம்பதிகளின் மருமகனும் காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், ராஜினி (கொழும்பு), கணேசதாசன் (கனடா), விமலதாசன் (கனடா), தயாளினி (கனடா), அகிலதாசன் (கனடா), ஜெகதாசன் (கனடா), புஸ்பாஜினி (கொழும்பு) ஆகியோரின் அன்புத்தந்தையும், குலேந்திரா, சைலா, கௌந்தி, கிருஷ்ணகுமார், பாமினி, தற்பரா, பரமநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற நாகம்மா, சின்னம்மா, வேலுப்பிள்ளை, நல்லையா, Dr.செல்லத்துரை (யாழ்ப்பாணம்), காலஞ்சென்ற செல்லம்மா ஆகியோரின் சகோதரரும், நிமேஷ், உமாசரண், விபுசரண், துவிஜனன், சாம்பவி, விதுஷன், சாமிரன், சாருணா, அக்சியா, அவிஷன், சுகந்தினி, ரவிசங்கர் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (08.12.2007) சனிக் கிழமை காலை 8 மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்கு வைக்கப்பட்டு நாளை (9.12.2007) ஞாயிறு காலை 8 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று மு.ப. 10 மணிக்குக் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*7-3/7, கொலின்வூட் வீதி,*
*வெள்ளவத்தை.*
T.P.2500931 (68686)

தகவல்:
மக்கள், மருமக்கள்

## சின்னத்தம்பி நடராசா

*(ஓய்வுபெற்ற இலங்கை வங்கிக் காசாளர்)*

கீரிமலையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராசா நேற்று (07.12.2007) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - கந்தாத்தை தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னு - மாரிமுத்து தம்பதியினரின் அன்பு மருமகனும், புனிதவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற ஜெகதீஸ்வரன் மற்றும் விக்னேஸ்வரன் (லண்டன்), ஜெயவதனி (ஆசிரியர்), கலாவதனி, காலஞ் சென்ற சதிஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சுரேஸ் (ஆசிரியர்), பபி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், கேஷாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கொழும்பில் நடை பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தியாகராசா மாணிக்கவாசகர் வீதி,*
*சுன்னாகம் தெற்கு.* (68727)

சி.சுந்தரம்
சி.ஆறுமுகம்
(சகோதரர்கள்)

## காசிப்பிள்ளை கதிர்காமு (டிக்கிரி)



புத்தூர், சிறுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை கதிர்காமு 6.12.2007 அன்று பரிஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற காசிப்பிள்ளை- நாகம்மா தம்பதிகளின் அருமை மகனும், பண்டத்தரிப்பு சின்னத்துரை, காலஞ்சென்ற தில்லையம்மா தம்பதியினரின் மருமகனும், ஈஸ்வரியின் (பிரான்ஸ்) அன்புக் கணவரும், தமிழாலினி(பிரான்ஸ்), சர்மிளா(பிரான்ஸ்), கார்த்தீபன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சி.கா.செந்தில்வேல்(புதிய ஜனநாயக கட்சி செயலாளர். கொழும்பு) திருமதி .தி.கெங்காதேவி(ஆனைக்கோட்டை) செல்வி. நீலாவதி(சிறுப்பிட்டி), திருமதி.சி. பரமேஸ்வரி(ஆனைக்கோட்டை) ஆகியோரின் அன்புச் சகோதரனும், செ.காந்தரூபனின்(பிரான்ஸ்) அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் பரிஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*தாயகம்,*
*சிறுப்பிட்டி வடக்கு,*
*நீர்வேலி.* (68729)

தகவல்:-
சி.கா. செந்தில்வேல்
திருமதி.தி.கெங்காதேவி
செல்வி.க.நீலாவதி
திருமதி.சி.பரமேஸ்வரி.


பாடசாலை மாணவர்களுக்கான விடுமுறைக்கால விசேட பயிற்சி நெறிகள்
ஆரம்பம் 09, 10.12.2007
DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE 2003
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN INTERNET E-MAIL
KID'S PROGRAMMES (Grade3-9)
ICT (Grade 10,11)
GIT (G.C.E A/L)
Softview Computer College
55, Arasady Road, Jaffna.

ICT Grade 10/11- R.Kumaran-B.Sc
புதிய பிரிவுகள் ஆரம்பம்: 08.12.2007 சனிக்கிழமை
English medium 11.30am, Tamil medium-2.00pm
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.
T.P:0776577359

கற்சுமி கல்வி நிறுவனம்
166, நாவலர் வீதி, யாழ்
கல்வியாண்டு - 2008
தரம் 01 முதல் O/L வரை
ஆரம்பம்: 10.12.2007
காலை 8 மணி
தரம் 5 புலமைப்பரிசில் வகுப்புக்கள் சிறப்புத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்கப்படுகிறது

புதிய பிரிவுகள் ஆரம்பம்
அனைவரினதும் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும்
பெனின்சுலா அக்கடமி
(புங்கன்குளம் வீதி, அரியாலை, யாழ்)
விஷேட புலமைப்பரிசில் தரம் 5 முதல் O/L வரை
08.12.2007 சனிக்கிழமை பி.ப 4 மணிக்கு ஆரம்பமாகின்றன.
மீண்டும் அனுபவம் மிக்க ஆசிரியர்களுடன்
விஷேட புலமைப்பரிசில் - T.ஹரிஷாந்த் (B.B.A)
கணிதம் - T.ஹரிஷாந்த் (B.B.A)
விஞ்ஞானம் - M.A.நிறோஷன்
- S.கோபிநாத்
தமிழ் - S.இராஜேஸ்வரன் (B.A)
- S.வினோத்
வரலாறு, குடியுரிமை - R.வித்தி (B.F.A)
வர்த்தகம், முயற்சியாண்மை - V.கிருபா (B.B.A)
- R.வித்தி (B.F.A)
சைவசமயம் - S.இராஜேஸ்வரன் (B.A)
- பிரியா
ஆங்கிலம் - S.N.குமார் (B.B.A)
புவியியல் - S.R.சர்மா (B.A)

கணக்கீடு
திரு N.சதீஸ்
B.B.A(Em:spl)
A/L 2009
கட்டுப்பாட்டுக் கணக்கு
ஆரம்பம்: 08.12.2007
சனி காலை 8.50
N.C.A. கல்வி நிலையம் இணுவில்

BITSMANS
கல்வி நிறுவனம், மானிப்பாய்.
A/L 2008/2009
வரலாறு
ஆசிரியர்
திரு.பத்மன் B.A (Hons)
ஆரம்பம் 8/12/2007
சனி 3 மணி மாலை

34 ஆவது வருட சேவை
விக்னா கல்வி நிறுவனம்
கிளை: 417, கே.கே.எஸ்.றோட்.
(யாழ்.இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
கல்வியாண்டு 2008 புதிய அனுமதிகள்
தரம் 6 தொடக்கம் O/L வரை
ஆரம்பம் 10.12.2007 (2மணி)
✱ யாழில் தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின்ஒருங்கிணைந்த சேவை
(அ/54619)

புதிய பிரிவுகள் ஆரம்பம்!!!
CB Computer Academy
Station Road, Kondavil. 021-4590291
09.12.07 (Sun)
Kid's Programmes (Grade 1-9)
ICT (Grade 10 & 11)
விடுமுறைக் காலத்தை வீணடிக்காதீர்கள்
Pascal for GIT (A/L)

NEW SEIENCE CENTRE
யாழ்.நகர்
A/L DAY CLASS
PHYSICS
LIGHT
ஆரம்பம் 10.12.2007 8.00 am
Mon-Fri (8.00-9.30am)
By: K.Selvan
Proprietor: N.Poopalasingam

Group Classes-Science
ஆங்கில மொழி மூலம்-Gr-9,10,11
By. Mr.RAGUMAR
ஆரம்பம் 10.12.2007-6.30A.M
75,இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு.

ஐடியல் அக்கடமி
கல்வியாண்டு-2008
தரம் 6 முதல் O/L வரை
ஆரம்பம் 10.12.2007 (திங்கள்)
யாழ்ப்பாணம் 8 மணி
சண்டிலிப்பாய் 12 மணி
காரைநகர் 3 மணி
மூன்று நிறுவனங்களிலும் ஒரே நாளில் ஆரம்பம்
Grade 6,7,8, English Medium
கணித ஆசானும், நிர்வாகியும்
V.N.பத்மநாதன்

அன்பொளி கல்வி நிலையம்
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.
புதிய கல்வி ஆண்டு - 2008
தரம் 04 முதல் 08 வரை
ஆரம்பம் - 10.12.2007(திங்கள்)காலை 9 மணி
அனுமதிக்கான விண்ணப்பப்படிவத்தினை சனி, ஞாயிறு தினங்களில் காலை 9 - 11 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.
இயக்குனர்.
குறிப்பு - ஏனைய வகுப்புகளும் மிக விரைவில் ஆரம்பிக்கப்படும். (68721)

NEW SCIENCE CENTRE
Proprietor: Poobalasingum யாழ் நகர்
PHYSICAL CHEMISTRY
sat, sun:12.30 - 2.00
INORGANIC பிரிவு II
Saturday, Sunday: 11-12.30
தொடர் இரசாயனவியல் கருத்தரங்கு 11-12தொடக்கம் 14-12 வரை நடைபெறும்
(68720)
By:- யாழ் முன்னணி ஆசிரியர்


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361-ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 08.12.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org